குருபாதம்


ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துன்மதி ஆண்டு மாசித்திங்கள் 10-3-82 [இதழ் 4

(திருப்புள்ளிருக்குவேளூர்) வைத்தீசுவரன்கோயில்

பங்குனி உத்திர விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானை வழிபடுதல்.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 | 10-3-82 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	இணைந்துவாழ்வோம்...	157
2	தருமைஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	161
3	"வில்லியும்-பாரதியும்"	166
4	சிவநாமாவளி இசைப்பாடல் ...	170
5	கடிதம்	171, 198
6	உங்களுக்குத்தேவை	172
7	திருஉசாத்தானம், திரு இடும்பாவனம், திருக்கடிக்குளத் தலச் சிறப்புக்கள் ...	173
8	அபிராமி அந்தாதி ...	187
9	பார்வையாளர் குறிப்பு	191
10	குடமுழ நந்தீசன் ...	192
11	செய்திகள் ...	196
12	எதிர்காலம் ...	199

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

...[★]...

நின்பாடல் என்று
நினைப்பாடல் அன்றியே
என்பாடல் எங்கே
இறைவனே — நின்பாடல்
ஆமே தனுவாதி
ஆகமநால் வாக்காதி
யாமேநீ சொக்கநா தா.

—சொக்கநாத வெண்பா. 86.

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி அருணைவடிவேல் முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 23
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ
குருபாதம்.

ஞானசம்பந்தம்

மலர் 41 | துன்மதி – மாசி – 10—3—82 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்.

இணைந்து வாழ்வோம்

மத அடிப்படைப் பண்பு :

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

"முப்பது கோடி முகமுடையாள்
உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்
செப்பும் மொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்பன நமது அருளாளர்களின் அமுதமொழிகள். இவை தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும் படம் பிடித்துக்

காட்டும் பளிங்கு மாளிகைகள். இப்பண்பாட்டினுல் தான் எல்லா மதத்தவரையும் இந்த நாடு அன்று முதல் இன்று வரை சகோதரர்களாக ஏற்றுப் போற்றிவருகிறது. இந்நாட்டில் சமீபகாலமாக மதமாற்றம், மதச்சண்டைகள் தலைக்காட்டு கின்றன. இந்நிலை மதங்களின் அடிப்படைக் கருத்துக்கே முரணனது. இதனை அனைத்துச் சமயத்தினரும் சிந்தித்துச் செயல்படவேண்டுகிறேம்.

கவலைதரும் நிகழ்ச்சி :

குமரிமாவட்டம் மண்டைக்காடு இன்று தமிழகத்தையும் தாண்டி, இந்தியநாடு முழுவதற்கும் அறிமுகமாகி விட்டது. மார்ச்சு முதல் நாள் மண்டைக்காட்டில் அருள்மிகு. பகவதி அம்மன் திருக்கோயிலுக்கு வழிபட வந்த தமிழ்நாடு மற்றும் கேரளத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்களை, அந்தப் பகுதியில் வாழும் கிறித்தவர்கள் திட்டமிட்டுத் தாக்கியுள்ளனர். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். விழாக்கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. கடலில் புனித நீராடும் இந்துக்களது உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அமைதிகாக்க முயன்ற காவல் துறையினர், திட்டமிட்டுப் பயிற்சிபெற்ற கிறித்தவ மீனவர் களால் தாக்கப்பட்டுள்ளனர். காவலர்கள் தற்காப்புக்காகச் சுட்டுள்ளனர். அமைதியாக இருந்த தமிழ் நாட்டில் இஸ்லாமி யர்களது திட்டமிட்ட மதமாற்ற முயற்சியால் மீனட்சிபுரக் கலவரங்களும், பதட்டங்களும் முழுவதுமாகக் குறைவதற் குள்ளேயே, கிறித்தவர்கள் மண்டைக்காட்டை ரணகளமாக்கி யிருக்கிருர்கள். மண்டைக்காட்டு நிகழ்ச்சிகளும், அதனை அடுத்து நிகழும் பதட்டங்களும், இந்து மக்களுக்கும், இந்து சமயத் தலைவர்களுக்கும் பெரும் அதிர்ச்சியினையும் – கவலை களையும் உண்டாக்கியுள்ளன.

விளைவுகளை உணருங்கள் :

குமரிமாவட்டத்தில் இன்று இந்துக்களைவிடக் கிறித்தவர் களின் எண்ணிக்கை அதிகம். அன்பு மதம் என்றும், தொண்டு மதம் என்றும் கூறித் தமிழ் நாட்டில் புகுந்த கிறித்தவப் பாதிரி யார்களைச் சகிப்புத்தன்மை மிக்க தமிழர்கள் மதிப்போடும் மரியாதையோடும் நடத்தினர். அவர்களது வழிபாட்டுரிமை களைக் குறுக்கிடாது பேணினர். அவர்களது தேவாலயங்களுக்கு நிலங்கள் வழங்கினர். கல்வியறிவற்ற ஏழை மீனவர்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றியபோதும் எதிர்ப்புத் தெரி

விக்காது இனிதிருந்தனர். அவர்கள் தொடங்கிய கல்வி நிலையங்களுக்குப் பொருளுதவி செய்து தம் குழந்தைகளையும் கல்வி கற்க அனுப்பினர். இத்தனைப் பண்பாடு மிக்க தமிழ் மக்களின் கலாசார வழிபாட்டு உரிமைகளுக்கு எதிராக ஒரு மாவட்டத்தில் தாங்கள் பெரும்பான்மையினர் என்ற நோக்கில் கிறித்தவர்கள் தீங்கு விளைவிப்பது நன்றி கொன்ற செயலாகும். தமிழகத்தின் பிற மாவட்டங்களில் கிறித்தவர்கள் சிறுபான்மை யினர். பல கோடி மதிப்புமிக்க தேவாலயங்களும், பள்ளிகளும், மருத்துவமனைகளும், பிற உடைமைகளும் பெரும்பான்மை இந்துக்கள் வாழும் பகுதியில் தான் அவர்களுக்கு இருந்துவரு கின்றன. குமரியில் அவர்கள் செய்யும் தவறுகளின் விளைவால், பிற மாவட்டங்களில் அவர்களுக்கு இந்துக்கள் தீங்குகள் விளைவிக்காமல் இருக்கவேண்டுமே என்ற கவலையும் நமக்கு எழுகிறது. நடந்தது எப்படியோ நடந்துவிட்டது. இனி நடப்பது நல்லதாகவே இருக்கட்டும். இருசாராரும் பரஸ்பரம் சகிப்புத் தன்மையோடு தத்தம் மதாசாரங்களைப் பின்பற்றி இணக்கமாக வாழ்வதே நல்லது, அவரவர் கடமையுமாகும்.

இலங்கையைப் பாருங்கள் :

அண்டை நாடான இலங்கையில் பௌத்தம், இந்துமதம், இஸ்லாம். கிறித்தவம் யாவும் உண்டு. அங்கே உள்ள அரசு எந்த மதத்தாரும் தங்கள் மதத்தைப் பற்றி எவ்வளவு உயர்வாக வேண்டுமானாலும் பிரசாரம் செய்து கொள்ள அனுமதிக்கிறது. ஆனால் பிற சமயத்தைப் பற்றி விமர்சிக்க வோ, கண்டிக்கவோ, அவர்கள் வழிபாட்டுரிமைகளில் தலையிடவோ சிறிதும் அனுமதிப்பதில்லை. நாகரிகம் மிக்க எந்த ஒரு சுதந்திர நாடும் அவரவர்கள் மத வழிபாட்டுரிமைகளில் பிறர் குறுக்கிடாத பாதுகாப்பினை வழங்கும் கடமை உடையது. மதச்சார்பற்ற அரசு என்பதற்கு எந்த ஒரு மதத்திற்கும் அரசின் தனிபட்ட ஆதரவு இல்லை என்பது பொருளே தவிர, மத நம்பிக்கை அற்ற அரசு என்பது பொருளாகாது. அரசியல் தலைவர்களும், மதத்தலைவர்களும், ஆட்சியாளர்களும் இதனை நினைவு கூர்ந்தால் நல்லது. வீடுதலை பெற்ற 34 ஆண்டு களுக்குப் பின்னரும் இந்திய மக்களின் சமய வழிபாட்டுரிமை பாதுகாக்கப் பெறுதிருத்தல் பெரிதும் வருந்தத்தக்கது.

சில படிப்பினைகள் :

குமரிமாவட்டக் கலகங்கள் வெறும் மதப்போராட்டம் என்றே சித்திரிக்கப்படுகிறது. என்றாலும் இதற்குப் பின்னணி-

வேறு உண்டு என்றும் பேசப்படுகிறது. குறிப்பாகக் கடற்கரை ஓரங்களில் கிறித்தவர்களுடைய ஆதிக்கம், வெளிநாட்டாரின் பெரும் பொருள் உதவியோடு அதிகரிக்கப்பட்டு வருவது, இந்திய நாட்டின் பாதுகாப்புக்கே ஊறு விளைக்கும் ஒரு மறை முக முயற்சி என்றும் பேசப்படுகிறது. காந்தியடிகள் விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த நெருக்கடியான காலத்தில் இஸ்லாமியர் இந்நாட்டைத் துண்டாடி பாகிஸ்தானை உருவாக்கியதும், அதனால் விளைந்த மேல் விளைவுகளும் நாடறிந்த ஒன்று. கிறித்தவர்களுடைய ஆதிக்கமும், அதன் வளர்ச்சியும் அவர்களுடைய மறைமுகச் செயல்களும் விளைக்கும் பின் விளைவுகளும் அவ்வாறு அமையக்கூடுமோ என அஞ்சுகின்றோம்.

வேண்டுகோள் :

இந்துமதம் சகிப்புத்தன்மை மிக்கது. சகிப்புத்தன்மை என்பது கோழைத்தனம் ஆகிவிடாது. புலி உறங்குவதால் பூனை என்று கருதுவது பேதமை. இந்நாட்டில் வந்துகுடியேறிய சமயங்களும், சமயஞ் சார்ந்தவர்களும் அச்சமயங்களின் தலைவர்களும் இதனை நினைவுகூர்வதுநல்லது. சிறுபான்மை இந்து சகோதரர்கள் மேல் திட்டமிட்டுத் தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு உரிய பின் விளைவுகளையும் சிந்திக்கவேண்டும். மண்டைக்காட்டுச் சம்பவங்களுக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம். அனைவரும் இணங்கி வாழ உடனடியாக வழி காண்பதே இன்றியமையாதது என வற்புறுத்துகின்றோம். எல்லோரும் இணைந்து இனிதே வாழ இறையருளைப் போற்றுகிறோம்.

"பாரத பூமி பழம்பெரும் பூமி
நீர்அதன் புதல்வன் இந்நினைவகற்றுதீர்"

—பாரதியார்.

திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில்

நடைபெற்ற

பிரும்மஸ்ரீ T. V. இராஜு சாஸ்திரியார் அவர்களின்

சதாபிஷேக வேத பாராயணப் பாராட்டு விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

12—2—1982

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. —ஞானசம்பந்தர்.

வேதத்தோற்றம் :

வேதம்என்பது அறிவுநூல். அது ஆன்மஅறிவை விளக்கும் பொருட்டுப் பரமேஸ்வரனுல் அருளிச் செய்யப்பெற்றதாகும், வேதத்தினைப் பரமேஸ்வரனின் மூச்சுக்காற்றென்றே கூறுவர். இறைவன் ஓதியருளிய இவ்வேதத்தை கௌசிகர், சாகலர். பாஷ்கலர், மாண்டுகர் முதலியரிஷிகள் பன்னூற்றுவர் கேட்டறிந்து உலகுக்குவழங்கினர். ரிஷிகளே வேதங்களைஇயற்றினர் என்று கூறுதல் மரபாகாது இந்த ரிஷிகளிடமிருந்து வழிவழியாகக் கேட்டே வேதம் ஓதிவரப்படுகின்றது. இதுபற்றியே வேதத்தைச் சுருதி என்பர். தமிழில்இதனைக் கேள்விநூல் எனக் குறித்தனர். இவ்வேதம் கடல்போல் அளக்க ஒண்ணுதது

வேதப்பகுப்பு :

இத்தகு அரும்பெரும் வேதத்தை முதன்முதல் வகைப் படுத்தியவர், பாதராயணர் என்னும் இயற்பெயரையுடைய வேதவியாசரேயாவர். இவர் ருக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம், அதர்வணவேதம் என வேதத்தை நான்காகவகுத்தார். ஒவ்வொருவேதமும் மந்திரபாகம், பிராமணபாகம், ஞானபாகம் என மூன்று பிரிவுகளையுடையது. அவற்றுள் மந்திரபாகமும், பிராமணபாகமும் கர்மகாண்டம் எனவும், ஞானபாகம் ஞான காண்டம் எனவும் பேசப்பெறும். மந்திரபாகம் எனப்படுவது பிரமன், விஷ்ணு, ருத்ரன், அக்கினி, வருணன், வாயு, சூரியன், அஸ்வினிதேவர்கள் முதலியதெய்வங்களைப்போற்றியுரைப்பன வாகும். பிராமணபாகம் என்பது மேற்கூறிய மந்திரங்களைக் கொண்டு வேள்விமுதலிய கிரியைகளைச்செய்யும் முறைகளை விளக்குவனவாகும். ஞானபாகம் அதாவது ஞானகாண்டம் என்பது உபநிடதங்களாகும். மேற்கூறிய மந்திரபாகங்களையும், பிராமண பாகங்களையும் இணைத்துக் கர்மகாண்டம் என்றும், அற்பசுருதி என்றும்கூறுவர். உபநிடதங்களை ஞானகாண்டம் என்றும், பிரமகாண்டம் என்றும், வேதாந்தம் என்றும், பிரபல ஸ்ருதி என்றும்கூறுவர். ஒவ்வொருவேதத்திலும் கர்மகாண்டம், ஞானகாண்டம் என்ற இருபகுதிகளும் உண்டு. முதலாவதாகிய கர்மகாண்டச் செயல்முறைகள் அனைத்தும் ஞானம்கிடைத்தற்கு அடிப்படையாக அமைவன. எனவேதான் ஒவ்வொரு வேதத் திலும் கர்மகாண்டம் முன்னாகவும், ஞானகாண்டம் (உபநிட தங்கள்) பின்னாகவும் அமைந்துள்ளன. சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், சந்தஸ் ஜோதிடம், கற்பம் என்ற ஆறு அங்கங்களை யும் உணர்ந்தால்தான் இவ்வேதங்களை ஓதியுணர்தல் கைகூடும்.

ருக்வேதம் :

'ருக்' என்ற சொல்லுக்கு மந்திரம் பாட்டு என்பதுபொருள். ருக்வேதத்தில்மந்திரப்பாடல்கள்மிகுதியாகவும்,கிரியாபாகங்கள் (வேள்வி பற்றிய பகுதிகள்) குறைவாகவும் உள்ளன. இப் பெரும்பான்மைபற்றியே இவ்வேதம் ருக்வேதம் எனக்காரணப் பெயர்பெற்றது. தமிழில் இதனை 'இருக்கு' வேதம் என்பர். இது தொகுக்கப்பட்டகாலத்தில் ஆயிரம் சாகைகளைக் (பிரிவு) கொண்டிருந்தது. இப்பொழுது 21 சாகைகளே உள்ளன. திரு ஞானசம்பந்தர் தேவாரத்துள் "முந்தியதேவர்கூடி முறைமுறை இருக்குச்சொல்லி" என்றும், "வேதத்தின் மந்திரத்தால் வெண் மணலே சிவமாகப் போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு

வேளுரே " என்றும் கூறப்படுவதால் ருக்வேதம் மந்திரபாகப் பாடல்களை சிறப்பாகக் கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

யஜுர்வேதம் :

'யஜ்' என்ற வேர்ச்சொல் வேள்வியைக்குறிக்கும். இவ் வேதத்தில் மந்திரபாகங்கள் குறைவாகவும், கிரியாபாகங்கள் அதாவது – பிராமணபாகங்கள் (செய்முறை) மிகுதியாகவும் கூறப்பட்டுள்ளதால் இது யஜுர் வேதம் எனக் காரணப்பெயர் பெற்றது. இது பற்றியே வேள்விக்கிரியையாகிய பிராமணங் களைச் செய்பவர்கள் பிராமணர் எனப்பட்டனர். இவ்வேதம் கிருஷ்ணயஜுர் (தைத்ரியம்), சுக்கிலயஜுர் (வாஜசனேயம்) என இரண்டாகக் கூறப்பெறும். சுக்கிலயஜுர் கிருஷ்ண யஜுரைவிடத் தெளிவு மிக்கது என்பர். இவ்வேதத்திற்கு 101 சாகைகள் இருந்தன. இப்பொழுது கிருஷ்ணயஜுர் வேதத் திற்கு 41 சாகைகளும், சுக்லயஜுர் வேதத்திற்கு 15சாகைகளும் ஆக 56 சாகைகளே உள்ளன. கிருஷ்ணயஜுருக்கு 32 உபநிட தங்களும் சுக்கிலயஜுருக்கு 17 உபநிடதங்களும் உள்ளன.

சாமவேதம் :

சாமம் என்ற சொல்லுக்கு "கானம்" (இசைப்பாட்டு) என்றும், சிவபரம்பொருள் என்றும் பொருள் கூறுவர். 'சாம கண்டன்' என்றும், 'சாமமும் ஓதுவதுடையார்' என்றும் திருமுறைகள் சிவத்தைக் குறிக்கின்றன. இவ்வேதம் இசைப் பாடல்களாக அமைந்துள்ளது. இது ஆயிரம் சாகைகளை உடையதாயிருந்தது "சாகை ஆயிரம் உடையார்" என்பது ஞானசம்பந்தர் வாக்கு. இப்போது 17 சாகைகளே உள்ளன இதில்உள்ள மந்திரங்கள் 1875 ஆகும். அவற்றுள் சாம மந்திரங் கள் 85 தான், 1725 மந்திரங்கள் ரிக் வேதத்திலிருந்து எடுக்கப் பட்டவை. மற்ற 65 மந்திரங்கள் யஜுர், அதர்வணவேத மந்திரங்களாகும் இது டச்சு, ஜர்மன், ஆங்கிலம், வங்காளி, இந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. ஜர்மா னியர்கள் இதை சுவரத்துடன் இசைத்தட்டில் பதிவுசெய்து பாதுகாத்துவருகின்றனர்.சாமகானத்தை, வேயகானம்,ஆரண்ய கேயகானம், ஊஹகானம், ஊஹ்யகானம், என நான்காகப் பகுத்துள்ளனர். சாமத்தில் 52 தேவர்கள் போற்றப்படுகின் றனர். அவர்களைப் போற்றுவதெல்லாம் ஒரே தேவரான ஈசனையே சேரும் எனப் பேசுகிறது. சோமன் என்ற சொல்

சர்வேஸ்வரனையும் குறிக்கும் என்றும் அவன் சாதியை விரும்புவதில்லை என்றும், ஆண் பெண் வேற்றுமைகள் அவனுக்கு இல்லை என்றும், எல்லோரும் அவன் குழந்தைகளே என்றும் கூறப்படுகிறது.

அதர்வணவேதம் :

அதர்வ என்ற சொல்லுக்கு அனல் (நெருப்பு) சிவன் என்ற பொருள்கள் உண்டு. அறியாமையை அதர் என்னும் அனல் எரிப்பதால் அதர்வ வேதம் எனப் பெயர்பெற்றுள்ளது என்பர். செம்மேனி எம்மானாக, செம்பொருளாக உள்ள பரம்பொருளைப் பற்றிப் பேசுவதாலும் இப்பெயர்பெற்றது என்பர். மேலும் அதர்வன் என்னும் அறிஞர் இம்மறையில் உள்ள மந்திரங்களை அதிகம் பிரசாரம் செய்ததால் அவரது பெயரால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். பிரம்மவித்தையைப் பிரகாசம் செய்வதால் இதற்குப் பிரம்மவேதம் என்றபெயரும் உண்டு. துஷ்டசம்ஹாரத்தைத் தூண்டுவதால் க்ஷத்ரவேதம் எனவும் வழங்குகிறது. நோய்பற்றியும், அது தணிக்கும் மருத்துவம் பற்றியும் பேசப்படுகிறது. ருத்ரனின் கோபச்சிறப்பைச் செம்மைப்படுத்திக் கூறுவதால் அதர்வணம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு ஒன்பது சாகைகள் உள்ளன. அதர்வணவேதம் ஓதுவோர் தென்னாட்டில் இல்லையெனத் தெரிகிறது. காசியிலும், காஷ்மீரத்திலும் சிலரே உள்ளனர் என்பர். இதற்கு 31 உபநிடதங்கள் இருப்பதாகத்தெரிகிறது. ஜர்மன், ஆங்கிலம், வங்காளி, இந்தி முதலிய மொழிகளில் இவ்வேதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

நமசிவாய மந்திரம் :

இந் நான்கனுள் அதர்வண வேதத்தை நீக்கி வேதத்தை மூன்றாகவே கூறுவர். இம்மூன்றில் நடுவணது, யஜுர் வேதம். இது ஏழு காண்டங்களையுடையது. இவற்றின் நடுவணதாகிய நாலாவது காண்டத்தின் நடுவில் (வேதத்தின் இருதய கமலத்தில்) பரமேஸ்வரனை நமஸ்கரிக்கும், நமகம், எனப்படும் ஸ்ரீருத்ரம் அமைந்துள்ளது. இந்த ஸ்ரீருத்ரமந்திரத்தின் நடு நாயகமாக மகாமந்திரமாகிய ' நமசிவாய ' என்ற பஞ்சாட்சரம் அமைந்திருப்பது பெருஞ்சிறப்பாகும். இதனையே " வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன்நாமம் நமசிவாயவே " என்று ஞானசம்பந்தரும் சிறப்பாக எடுத்துப் போற்றியுள்ளார்.

நால்வகைப்பேறுகள் :

வேதங்கள் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு பேறுகளையும் பலகோணங்களில் பெரிதும் எடுத்துரைக்கின்றன. தமிழில் இவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்பர். இவற்றை அடைவிப்பனவே நூல்களின் நோக்கமாக வேண்டும் என்பது மரபு. பொருளை அறவழியில் ஈட்டுக. ஈட்டியபொருளைத் தருமம், காமம், மோட்சம் எனவகைப் படுத்தி வழங்கித்தனக்கும், தன்குடும்பத்தார்க்கும், நாட்டுக்கும் நலம் பயப்பவராக அனைவரும் வாழவேண்டும் என்பதே வேதத்தின் நோக்கம்.

ஆகமங்கள் :

வேதத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைப்படுத்த இயலாத யாகங்களையும், பயன்கருதி மட்டுமே செய்யப்படும் கிரியைகளையும் விலக்கி மந்திரப்பகுதிகளின் சாரங்களையும், உபநிடதங்களாகிய ஞானப் பகுதிகளின் சாரங்களையும் இணைத்து யாவர்க்கும் பயன்படும் வண்ணம் பரமேஸ்வரன் அருளிச்செய்தனவே சிவாகமங்கள் எனப்படுவன.

வாழ்த்துரை :

வாழ்வியல் நெறிமுறைகளாகிய தருமத்தின் வழிநின்று பொருள் ஈட்டி, பின் இவற்றை உரியவகையில் வழங்கி உலகப் பற்றிலிருந்து விடுபட்டு – உலகுக்கு அப்பாற்பட்ட சிவபரம் பொருளோடு இரண்டறக்கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்று அனைவரும் வாழவேண்டும். அறுபதாண்டுகட்கும் மேலாக ஸ்ரீ அமிர்தகடேசர் ஆலயத்தில் வேத பாராயணப் பணிசெய்து சிரஞ்சீவித்துவம் பெற்றுத் திகழும் பிர்மஸ்ரீ இராஜு சாஸ்திரிகளுக்குப் பக்தர்களும் பணியாளர்களும் சதாபிஷேக விழாக்கொண்டாடுவதும், அதன் நினைவாக வேத பாராயண சபை நிறுவி வேதபாராயணத்தை வளர்ப்பதும் பாராட்டிற்குரியது. இப்பணியில் பெரும்பங்கு கொண்டுள்ள ஆக்கூர் திரு. T. R. அகோரம் ஐயர் உள்ளிட்ட அனைவருக்கும் விழாநாயகர் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகளுக்கும்சிறப்புரை யாற்றும் உயர்நீதிமன்ற நடுவர் உயர்திரு. T. N. சிங்காரவேல் B. A. B. L. அவர்களுக்கும் எல்லா நலமும் பெருக ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைச் சிந்திக்கிறோம்.

வாழ்க உலகெலாம் !

“ வில்லியும் – பாரதியும் ”

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

(மலர் 41. இதழ் 3, பக்கம் 135 இன் தொடர்ச்சி)

என்ன கொடுமையிது; என்று பார்த்திருந்தார்
ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ;
வீரமிலா நாய்கள்; விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்து; தராதலத்திற் போக்கியே
பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினர்;
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ ?

பெண்மையை உயர்த்தவந்த கவிஞர் ஆவேசத்தில், பெண்களின் புலம்பலைப் ‘ பெட்டைப் புலம்பல் ’ என நகையாடியும் விடுகிறார். இவ்வாறான உணர்ச்சிக்கூறுகளைப் பாஞ்சாலி சபதத்தில் பல இடங்களில் நாம் காணமுடிகிறது.

தங்கள் நாட்டினையே, பணயப்பொருளாக வைத்துத் தருமன் சூதாடித் தோற்கிறான்; கதைப்போக்கில் அது ஒரு நிகழ்ச்சி. வில்லி இந்த நிகழ்ச்சியில் துளங்கவே இல்லை. வில்லிக்கு தருமன் தன்னாடு இழந்தது மட்டுமே காட்சிக்கு வருகிறது. பாரதிக்குத் தருமன் நாடுவைத்து இழந்த இடத்தைப் பாடுகிறபோது, பாரதத்தின் பழங்கதையும், உடன் நெஞ்சில் பூக்கிறது; வணிகத்தின் பொருட்டுவந்த ஆங்கிலேயர்களிடம், இந்திய நாட்டுச் சிற்றரசர்கள் தங்கள் நாடுகளை – அரசியல் சூதில் – பகடைப்பொருள்களாக வைத்திழந்த கொடுமையில் அவர் நெஞ்சு கொதிக்கிறது. தருமன் நாடுவைதிழந்த செய்தியைப் பாடும்போது பாரதிக்குப் புதிய வினா ஒன்று கேட்கத் தோன்றுகிறது; தர்க்காவாதம் புரிகிறார் கவிஞர்.

கோயிற் பூசை செய்வோர் – சிலையைக்
கொண்டு விற்றல்போலும்;
வாயில் காத்து நிற்போன் – வீட்டை
வைத்திழத்தல் போலும்;
ஆயிரங்க ளான – நீதி
அவை யுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் – சிச்சீ
சிறியர் செய்கை செய்தான்;

நாட்டுமக்களை உடல் என்றும் மன்னனை உயிர் என்றும் சொன்ன காலம் சங்ககாலம். மன்னனை உடம்பாக்கி மக்களை உயிராக உருவகித்தகாலம் கம்பர்காலம். பாரதி மேலும்ஒருபடி போகிறார்; அரசன் நாட்டுக்கு உடலும் அல்லன்; உயிரும் அல்லன்; அவன் ஒரு காவலன்; காவல் உரிமை உண்டேதவிர, நாட்டை இழக்கும் உரிமை அவனுக்கு ஏது எனக்கேட்டு புது மரபு படைக்கிறார் கவிஞர்; பாரதக்கதை மறந்து பாரதநாடு நெஞ்சில் விரிகிறது;

நாட்டு மாந்த ரெல்லாம் – நம்போல்
நரர்கள் என்று கருதார்
ஆட்டு மந்தை யாமென் – றுலகை
அரசர் எண்ணி விட்டார்;
காட்டு முண்மை நூல்கள் – பலதாம்
காட்டி னார்களேனும்
நாட்டு ராஜநீதி – மனிதர்
நன்கு செய்யவில்லை;

மக்களை மக்கள் என்று கருதாது அடிமைப்படுத்திய இந்திய அரசர்களை நொந்துகொண்டுவிட்டு மீண்டும் கதையோட்டத்திற்குக் கவிஞர் திரும்புவதைப் பார்க்கின்றோம்;

பாஞ்சாலி சபதத்தில் மறைந்து கொண்டு பாரதி பாரத நாட்டின் விடுதலையைப் பாடினார் எனப் பலர் பொருத்திக் காட்ட முயல்கின்றனர். அது ஒரு நல்ல கற்பனை தான். பாஞ்சாலியே பாரதத்தாய்; துரியோதனாதியர்கள் வெள்ளையர்கள்; பாண்டவர்கள் இந்திய மன்னர்கள்; என்றெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்துநயங்கூறுவார் -ஒன்றை மறந்துவிடுகிறார்கள். மேலெழுத்தவாரியாக ஒப்பிட்டு மகிழ இம்முறை சரிபோலத் தோன்றினாலும், இவ்வாறான ஒப்பீட்டில், பல முரண்கள் உண்டாவதை மறுத்தற்கில்லை; எனவே, பாஞ்சாலி சபதத்தைப் பாரதத்தாய் சபதமாக உருவகித்தார் என்று கொள்ளத் தேவையில்லை. காப்பியம் – காப்பிய நலங்கருதியே பாடப்பெற்றது; கவிஞனுக்குப் பல இடம் இங்கே கருத்துச் சொல்லப்பயன் பட்டது என்பதே பொருத்தமாகத்தெரிகிறது. அஞ்சாமையே, வாழ்வாகக் கொண்ட கவிஞன், ஒரு பழங்கதைக்குள் மறைந்து நின்று விடுதலைப்போரை ஊக்கினான் என்பது அவனுக்குப் பெருமை தருவதாகுமா என்பதைச் சிந்தித்தல் நல்லது. கதை எதுவாயினும், கவிஞன் தன் கருத்துக்களைச் சொல்ல, அதிலே இடம் தேடிக்கொள்வான். இம் முயற்சியிலேயே அவனது கவிதை வெற்றியும் இணைகிறது. எனவே, பாஞ்சாலிசபதம்

பாரதி கூறியதுபோல, எளிய வடிவில் அமைந்த ஒரு காப்பிய முயற்சியே தவிர, திட்டமிட்டுப்பாடப்பெற்ற உருவகக்கவிதை அன்று; இந்நிலைக் களத்தில் சிந்திக்க இன்னும் நிறைவான செய்திகள் உண்டு.

நாட்டு விடுதலைக்காகப் போராடும் நாம் – நமது இல்லங்களிலே பெண்களை அடிமைப்படுத்துவது நீதியாகாது என்பதே பாரதியின் நோக்கு. முப்பதுகோடி ஜனங்களில் அவர்கள் ஒரு பதினைந்துகோடியல்லவா ? எனவே அவர்களுக்கும் விடுதலை தந்து, அவர்களையும் விடுதலைப் போரில் ஈடுபடுத்தத்துடிக்கிறது கவிஞர் நெஞ்சம். உண்மையிலேயே பெண்மை அடிமைப் பட்டுக்கிடந்த காலம் பாரதி காலம். பாஞ்சாலி சபதத்தையே பெண்மையின் வீரத்தைப் பேசக் களமாகக் கொண்ட பாரதி – தக்க இடம்பார்த்துக் கவிதை நலங்கெடாது தம் கருத்தினை வற்புறுத்துகின்றார். வில்லியின் காலத்தில் பெண் விடுதலை பற்றிய எண்ணங்கள் இல்லை. எனவே, இதுபற்றி வில்லியிலே தேடிப்பார்க்க இடமேயில்லை. சூதாட்டம் சூடுபிடித்து வளர்ந்த நிலை; தங்கள் ஐவரையும் சூதில்இழந்து தருமன் திகைத்திருக்கும் வேளை; வஞ்சகச் சகுனி திரௌபதியையும் வைத்து ஆடத் தூண்டுகின்றாள்.

மெய்வரும் திறத்தில் உம்மை வெல்லுமாறு வேறலால்
ஐவரும் திருந்த எங்கள் அடிமையின்னர் ஆயினீர்;
மைவருந் தடங்கண் வேள்வி மாது தன்னை ஒட்டி நீர்;
கைவரும் கவற்றின் இன்னம் எறிக என்று கழறினன்,

தருமனும் அவ்வாறே ஆடத் தொடங்குகின்றான். ஆட்டத்தில் சகுனி வெல்கிறாள். ஐவர்க்கும் தேவியாம் பாஞ்சாலியும் அடிமையாகிவிடுகிறாள்; இந்நிகழ்ச்சிக் கண்டு அவையோர் வருந்தி மொழிகிறார்கள்; வீடுமனும், விதுரனும் துரியனைக் கண்டிக்கிறார்கள். இது வில்லியின் நிலை; பாரதி, பெண் – கட்டிய கணவனாலேயே மாற்றானுக்கு அடிமைப்படுத்தபடுகிறாள் என்ற பழங்கதை கேட்டதும் கொதித்து எழுகிறார்;

பாவியவர் சபைதனிலே – புகழ்ப்
பாஞ்சால நாட்டினர் தவப்பயனை
ஆவியி லினியவளை – உயிர்த்(து)
தணிசுமந் துலவிடும் செய்யமுதை
ஓவியம் நிகர்த்தவளை – அரு
ளொளியினைக், கற்பனைக் குயிரதனைத்,
தேவியை, நிலத்திருவை – எங்கும்

தேடினுங் கிடைப்பருந் திரவியத்தை
கொடியவர் அவைக்களத்தில் அறக்
கோமகன் வைத்திடல் குறித்துவிட்டான்;

இதனைக் கூறிய கவிஞனுக்கு, இந்த அடாத செயலை ஒருப்பட மனமில்லை; உவமைகளால் இந்தச் செயலைச்சாட நினைக்கிறான்;

வேள்விப் பொருளினையே – புலைநாயின் முன்
வென்றிட வைப்பவர் போல்
நீள்விட்டப் பொன்மாளிகை – கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்
ஆள்விற்றுப் பொன் வாங்கியே – செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்
கேள்விக் கொருவரில்லை – உயிர்த்தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கினான்;

எனப்பேசுகிறார் அமரகவி. ஒவ்வொரு உவமையும் பாரதியே புதிதாகப் படைத்த உவமைகள்; காலகாலமாகப் பேசிவரும் உவமை எல்லைகளைக் கடந்து புதிய உவமைகளை உருவாக்கிச் சாடுகிறது கவிதை நெஞ்சம்; வில்லி பேசாத இந்த இடத்தில் பாரதியின் குமுறல் பெண்மைக்குத் தரும் பெருஞ்சிறப்பாகவே அமைகிறது;

திரௌபதியை அரசவைக்கு அழைத்துவரக் கட்டளை இடுகிறான் துரியோதனன்; இந்தச்செய்தி வில்லியிலும் உண்டு. பிராதிகாமி பாஞ்சாலியை அழைக்கச் செல்கிறான். இங்கே பாரதி உணர்ச்சிவெள்ளமாக சில வரிகளை எழுதிக்குவிக்கிறார்; 'திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்துவரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்' என்று இப்பகுதிக்குத் தலைப்பிட்டுள்ளனர். இங்கே பாரதி எழுதியிருக்கும் வரிகள் வேறுஎங்கும் காணவியலாதவேகமும் – கோபமும் கொண்டு எழுந்தன.

தருமம் அழிவெய்த சத்தியமும் பொய்யாக
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய
மோன முனிவர் முறைகெட்டுத் தாம்மயங்க
வேதம் பொருளின்றி வெற்றுரையே யாகிவிட
நாதங் குலைந்து நடுமையின்றிப் பாழாகக்
கந்தருவ ரெல்லாங் களையிழக்கச் சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோர் அனைவோரும் பித்துறவே

நாடு நிலை தடுமாறி – நானிலமே இந்த அதர்மத்தால் கீழ்மை யுற்றது என்கின்றன மேற்கண்ட வரிகள். (தொடரும்)

சிவநாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் - பியாகடை] [ஆதிதாளம் - திஸ்ர நடை

நீலகண்டம் நீலகண்டம் என்று சொல்லுவோம்
நிதம்அவன் அடிநினைந்து நமனை வெல்லுவோம் (நீ)

1. நீலகண்டம் எனமொழிந்த நீலகண்டர்க்கே
நீங்கிடாத இளமைநிலையினை அளித்தவன் (நீ)

2. பாலன் மார்க்கண்டன்அன்று பாதம் பணிந்திடப்
பாரில்என்றும் பதினாறெனும் பதம்கொடுத்தவன் (நீ)

3. அலைகடல் வருநஞ்சை அமுதாக உண்டவன்
அம்மைவேண்ட அரியகண்டத்தே அமைத்தவன் (நீ)

4. அகந்தைகொள்ளயன் சிரத்தில் ஒன்றரிந்தவன்
அன்று நால்வர்க் காலின்கீழ் அறம் உரைத்தவன் (நீ)

5. ஆசைகொண்டு ஆகமவழி அர்ச்சனை புரியும்
அம்பிகைக்கு வெள்ளங்காட்டி அருள் புரிந்தவன். (நீ)

6. கணைதொடுத்த காமனைக் கண்ணால் எரித்தவன்
கலக்கம் செய்த மதகளிற்றினை உரித்தவன் (நீ)

7. தீயெழச் செய் திரிபுராதியரை எரித்தவன்
சிந்தியாத தக்கன் வேள்வியைச் சிதைத்தவன் (நீ)

8. திருநிழல் பந்தர்பணிசெய் சிலந்தியை அந்நாள்
சிறந்த சோழனுக்கித் தேசம்ஆளச் செய்தவன் (நீ)

9. நீதியோடு ஆளும் மனுநீதிச் சோழர்க்கே
நீள்சடையன் விடைமேல் வந்தருள் புரிந்தவன் (நீ)

10. அகமகிழ்ந்து தன்மகவை அரிந்தமு தளித்த
அரும்பெரும் சிறுத்தொண்டரை ஆண்ட மன்னவன் (நீ)

11. அன்பொடுதன் கண்ணிடந்து அப்பும் கண்ணப்பன்
அவன்கரம் பிடித்து அரியபதம் அளித்தவன் (நீ)

12. அபயம்என் றடைந்தவர்க்கு ஆறுதல் தருவன்
அம்மையோடு ஏறதேறி அருள்தர வருவன் (நீ)

கடிதம்:

S NATARAJA NADAR
Retired Districr & Sessions Judge

20. Besant Road
MADURAI
2—3—82

* * ஞானசம்பந்தம் திங்கள் இதழ்களை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காலத்திலிருந்து மாதந்தோறும் பெற்று மகிழ்வுடன் படித்து பயனடைந்துவருகிறோம். நாங்கள் படிப்பதுமாத்திரமன்று ; வீட்டிலுள்ள பிள்ளைகளும், பாலர் இல்லங்களிலுள்ள ஆசிரியர்களும், காப்பாளர்களும் படித்துப் பயனடைந்துவருகிறார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரைகளும், செயலர் அவர்கள் முன்னுரை பல பேரறிஞர்களின் அருளுரை களும், தலச்சிறப்புகள், மருத்துவக்குறிப்புகள் தோத்திர, சாஸ்திரபாடல்கள், விளக்கங்கள், ஆதீனசேவைகள், நேயர் கடிதங்கள், ஜோதிடம் என பற்பல சிறந்த கட்டுரைகள் விளக்கங்கள்மூலம் வாசகர்கள் உள்ளங்களைப் பெரிதும் கவர்வனவாக, இதழ்கள் சிறப்பாக வெளிவருவது பெரிதும் பாராட்டுதற்குரியது.

இதழ்களைப்பத்திரமாகச் சேமித்து ஒவ்வொரு ஆண்டு இதழ் களையும் தனித்தனியாக பைண்டிங்செய்து பாலர் இல்லம் லைபரரியில் வைக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் அவர்களுக்கும் இதழ்களை பரிமளிக்கச் செய்யும் அன்பர்களுக்கும் எங்கள் பணிவான வணக்கங்கள். *

தைத்திங்கள் இதழ் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ காசி விசுவநாதமூர்த்திக்குப் பாலாபிஷேகம் செய்யும் காட்சி உள்ளத்தைப் பெரிதும் உருக்கச்செய்வதாக அமைந்துள்ளது.

S. நடராஜ நாடார்

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளுரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருஉசாத்தானம், திருஇடும்பாவனம், திருக்கடிக்குளத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தஞ்சைமாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் இம் மூன்று திருத்தலங்களும் உள்ளன. இவை திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு எழுந்தருளிய போது அருளிய ஒவ்வோர் திருப்பதிகத்தைப்பெற்றவை. சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 107, 108, 109 ஆவது தலங்களாகப் போற்றப்பெறுபவை. தலயாத்திரை செய்வோர் அடுத்தடுத்துள்ள இம்மூன்று திருத்தலங்களையும் தொடர்ந்து வழிபாடுசெய்யலாம். இவற்றின் சிறப்புக்களைத் தனித்தனியே காண்போம்.

1. திருஉசாத்தானம் (கோயிலூர்)

இத்தலம் திருத்துறைப்பூண்டி - அறந்தாங்கி புகைவண்டித் தொடரில் முத்துப்பேட்டை இரயில் நிலயத்திலிருந்து வடக்கே 2 கி. மீட்டர் தூரத்தில் உள்ளது. கோயிலூர் என வழங்கப் பெறுகிறது. இப்பெயருடைய ஊர்கள் பல இருத்தலால் முத்துப்பேட்டை-கோயிலூர் என இவ்வூரை மக்கள் வழங்குவர். திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், மன்னார்குடி, தஞ்சாவூர் முதலிய பல ஊர்களிலிருந்து முத்துப்பேட்டை வருதற்குப் பேருந்துகள் உள்ளன. கோயிலூருக்கு பேருந்து நிலயத்தி லிருந்து மன்னார்குடி செல்லும் பேருந்துகளிலும் செல்லலாம்.

தலப்பெருமை:

இராமர், இலக்குமனர், சாம்புவான், சுக்கிரீவன் அனுமான் முதலியோர் வழிபட்டதலம். இராமர் சேதுபந்தனம் செய்தற்கு இத்தலத்திறைவரிடம் மந்திர உபதேசம்பெற்றுச் சென்றார் ஆதலின் இறைவர் மந்திரபுரீசுரர் என வழங்கப்பெறுகின்றார். இராமர் இத்தலப் பெருமானிடம் கடலில் அணைகட்டுதற்குரிய வழி வகைகளை உசாவியதலம் ஆதலின் இவ்வூர் உசாத்தானம் எனப் பெயர் பெற்றது. இராமர் வேதாரண்யம், இராமேசுரம்,

கன்யாகுமரி ஆகிய மூன்று இடங்களில் அணைகள் கட்டினுர் என்றும் இறைவன் அருளால் இராமேசுரத்திருந்து கட்டிய அணையே கை கூடிற்று என்றும் கூறுவர். இவற்றை ஆதிசேது, மத்தியசேது, அந்தியசேது எனக் கூறுவதுண்டு. இத் தலத்தி லுள்ள சிவலிங்கம் வெண்மை நிறத்தோடு விளங்குவது தனிச் சிறப்பு. இத்தலமரம் மா. மாமரத்தின் அடியில் சிவலிங்கப் பெருமான் விளங்குவதால் சூதவனம் என இத்தலம் வழங்கப் படுகிறது. இதற்கு ஏற்ப விநாயகர் கையில் மாவிலே ஏந்திக் காட்சிதருகிருர். புகழ்மிக்க பெரிய சிவன்கோயிலே உடையதால் உசாத்தானம் கோயிலூர் என வழங்கப்பெறுகிறது. கோயில் என்பது சிதம்பரத்திற்குரிய பெயர் ஆதலாலும் தில்லையான் உறைவிடம் திருஉசாத்தானமே' என்பது இத்தலத் தேவாரத் தொடர் ஆதலாலும் தில்லேப்பெருமான் விரும்பி உறையும் திரு உசாத்தானமும் கோயிலூர் என வழங்கப்பெற்றது எனவும் கொள்ளலாம்.

கோயிலமைப்பு :

தென்னே முதலிய மரங்கள் அடர்ந்த பொழில்களால் சூழப் பெற்ற அழகிய கிராமம் கோயிலூர். பேருந்துச் சாலேயில் கோயில் சார்பில் அமைக்கப்பெற்ற அழகிய வளேவு நம்மை வரவேற்கிறது. வளேவைக்கடந்து சிறிது தூரம் சென்ருல் கோயிலே அடையலாம். கிழக்குநோக்கியசந்நிதி. எதிரே திருக் குளம் உள்ளது. கரையில் விநாயகர்கோயில் சுவாமிசந்நிதிக்கு எதிரே விளங்குகிறது. அண்மையில் திருப்பணிகள் செய்யப் பெற்று மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்த தலம் ஆதலால் கோயில் புதுப்பொலிவோடு காட்சிதருகிறது. ஐந்துநிலேகளுடன் கூடிய அழகிய இராஜகோபுரமும் அடுத்து மூன்று நிலேகளுடன் இரண்டாம்கோபுரமும் விளங்குகின்றன. இரண்டு பிராகாரங்கள் உள்ளன.

இராஜகோபுர வாயிலில் விநாயகர் முருகன் உள்ளனர். வழிபட்டு உள்ளே சென்ருல் இரண்டாம் பிராகாரத்தை அடையலாம். வெளிப் பிராகாரத்தில் தென்கிழக்கு மூலேயில் மணிகர்ணிகை தீர்த்தம் உள்ளது. வடதிசையில் அம்பாள் சந்நிதி தெற்குநோக்கி விளங்குகிறது. சுவாமி அம்பாள் கோயில்கள் கருங்கல் திருப்பணிகளேக் கொண்டவை. மேற்குப் பிராகாரத்தில் தலமரம் மா உள்ளது சுவாமி சந்நிதியில் உள்ள விநாயகர் கொடிமரம் நந்தி பலிபீடங்களே வழிபட்டு இரண்டாவது வாயிலேக்கடக்கும் போது குடவறையில் அதிகார நந்திகேசுரரைத் தரிசிக்கலாம். முதற்பிராகாரத்தில் தெற்குத்

திருமாளப்பத்தியில் அறுபத்து மூவரையும் சப்தமாதர் முதலி யோரையும் வழிபடலாம். மேற்குத் திருமாளப்பத்தி மண்ட பத்தில் விசுவநாதர் விசாலாக்ஷி சூதவனவிநாயகர், சோமாஸ் கந்தர், வருணன் மார்க்கண்டேயர் இராமர் பூசித்தலிங்கங்கள் உள்ளனர். அடுத்து அன்னபூரணியும் முருகப்பெருமானும், அடுத்து துர்க்கை, லக்ஷ்மி சரசுவதிதேவியரும் உள்ளனர். வடக்குத் திருமாளப்பத்தியில் நவகன்னியர் உருவங்கள் உள்ளன.

ஈசானத்திசையில் நடராசசபை உள்ளது. இங்குதான் விசுவாமித்திரருக்குப் பெருமான் திருநடனக் காட்சிகாட்டிய தாகக் கூறுகின்றனர். நடராசரை வழிபடும்போது தேவாரத்தில் 'தில்லைப் பெருமானை' இத்தலத்தில் திருஞானசம்பந்தர் நினைந்து பாடுவது நம்நினைவுக்குவரும். கீழைத் திருமாளப்பத்தியில் பைரவர் விளங்குகிறார். வாயிலின் இருபுறங்களிலும் சூரிய சந்திரர்கள் உள்ளனர்.

கோஷ்டங்களில் தெற்கே விளங்கும் சுரஹரமூர்த்தி இத்தலத்தில்சிறப்புடையவர். இறைவனது அஷ்டாஷ்டமூர்த்தங் களில் இம்மூர்த்தியும் ஒருவர். மூன்றுதலைகளோடும் மூன்று கால் களோடும் விளங்கும் இவரை வழிபடுவோர் சுரநோய்நீங்கிநலம் பெறுகின்றனர். அடுத்துதக்ஷிணாமூர்த்தியும், மேற்கேஇலிங்கோத் பவரும் வடக்கே பிரமன் துர்க்கை ஆகியோரும் உள்ளனர்.

சுவாமிகோயில் – கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் இடை நாழிகை மகாமண்டபம், நிருத்தமண்டபம் ஆஸ்தான மண்டபங்களோடுவிளங்குகிறது. மேல்விமானங்களில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஆஸ்தான மண்டபவாயிலில் சங்கநிதி பதுமநிதித் தெய்வங்கள் காட்சி தருகின்றன. நிருத்த மண்டபத்தில் திருவுலாப்போதும் திருவுருவங்கள் உள்ளன. சுவாமிசந்நிதியில் விநாயகர் துவாரபாலகர்கள் உள்ளனர். வழிபட்டு பெருமானைத் தரிசிப்போம். நம் உள்ளங்கவரும் பெருமானாக மந்திரபுரீசுரர் விளங்குகிறார். வழிபட்டு அம்பாள் கோயிலை அடைவோம். அருள்மிகு பெரியநாயகியம்மைகருணை கூர்ந்த திருமுகத்தோடு காட்சிதருகிறார்.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு மந்திரபுரீசுவரர் வெண்மை நிறமுள்ள சுயம்புலிங்கம், அம்பிகை திருப்பெயர் அருள்மிகு பெரியநாயகி, விநாயகர் சூதவனவிநாயகர் எனப் படுகிறார். மூன்று திருமுகங்களுடனும் முக்கால்களுடனும்

விளங்கும் சுரஹரேசுரர் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. தீர்த்தங்கள் – அனுமன் தீர்த்தம், மார்க்கண்டேயதீர்த்தம், கௌதம தீர்த்தம், முதலியன. தலமரம் – மா.

திருவிழா :

வைகாசி விசாகத்திற்கு முன் பத்து நாட்கள் இத்திருக்கோயில் பெருவிழா நிகழ்கிறது.

புராணவரலாறுகள்

இராமர் மந்திரஉபதேசம்பெற்று, சீதையை அடையச் சேது பந்தனம் செய்தற்கு வேதாரண்யம், மணமேற்குடி முதலிய பல இடங்களில் முயற்சித்தார். அணைகட்ட முடியாமல் தடைகள் பலவும் ஏற்பட்டன. இராமர் சிவபெருமானது அருளைப்பெற்றே பணியைத் தொடரவேண்டுமென்று தீர்மானித்து இத்தலத்துக்கு வந்து இறைவனை வழிபட்டு மந்திர உபதேசம் பெற்றுச் சென்று சேதுபந்தனம் செய்து முடித்தார் எனக்கூறப்படுகிறது. இத்தல வரலாற்றை இத்தலத் தேவாரப் பாடலும்

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அனு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

என்று குறிப்பிடுகிறது. இத்தலத்திற்குஅருகில் இராமன்கோயில், சாம்பவான்ஓடை, அனுமன்காடு, சுக்கிரீவன் பூசித்த பேட்டை, தம்பிக்கு நல்லான் பட்டினம் முதலிய ஊர்கள் இருப்பதும் மேற்கூறிய வரலாற்றுக்கு அரண்செய்வனவாயுள்ளன.

சுவேதலிங்கம் :

ஆதிசேடன் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்து வழிபட்டார் என்றும், கருடபகவான் ஆகாயமார்க்கமாக அமுத கலசத்தை ஏந்திச் சென்றபோது சிந்திய அமுதம் இத்தலத்து இறைவன் முடிமீது பட்டதால் சிவபெருமான் வெண்மை நிற முற்றார் என்றும், தலபுராணம் கூறுகிறது.

வருணன், மார்க்கண்டேயர் :

குட்டநோயுற்றும் அறிவுதிரிந்தும் வருந்திய வருணன் இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டு நலமுற்றான். மார்க்கண்டேயர் இயமன்வீசிய பாசக்கயிற்றினால் ஏற்பட்டவடுக்கள் நீங்க இத்தலத்திற்கு வந்து தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடிஇறைவனை வழிபட்டு வடுநீங்கப் பெற்றார்.

இந்திரன் விசுவாமித்திரர், இராமர் சுக்கிரீவன், சாம்பவான் முனிவர்கள் பலரும் வழிபட்டு இறைவன் திருவருளைப் பெற்று உள்ளனர்.

திருப்பதிகம் :

திருஞானசம்பந்தர் அருளிய ஒருதிருப்பதிகம் இத்தலத்திற் குள்ளது. திருப்பதிகம் சலவைக்கல்லில் பொறித்து வைக்கப் பெற்றுள்ளது. இத்தலம் முல்லைநிலப் பகுதியைச் சார்ந்த தென்றும், பொழில்களும் வளமான கழனிகளும் சூழ்ந்ததென் றும் உயர்ந்த மாளிகைகளை உடையதென்றும் கூறப்பட் டுள்ளது. இங்குள்ள இறைவன் இராமன் முதலியோரால் வழி படப்பெற்றவன் என்றும், விடையேறிப் பலிகொண்டவன் என்றும், தன்னை எண்ணாது தக்கன் செய்த பெருவேள்வியை ஊமன் கண்டகனவாக்கியவன்என்றும், வேதியரும்பக்தர்களும் நியமத்தோடும் பக்தியோடும் வழிபட விளங்குபவன் என்றும், கருதுவார் மனத்துளான் என்றும், இராவணனை அடர்த்தவன் திருமால் பிரமர்க்கு அறியொணாதவன், மாதொருகூறன், என்றும் கூறப்பட்டுள்ளது. தில்லைப்பெருமான் விரும்பி உறையும் தலம் என்று இத்தலத்து நடராசரைத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுவது அறிதற்குரியது. இத்தலத்திருப்பதிகத்தை ஓதிவருபவர் நரை திரையின்றி என்றும் இளமையோடு நன்னெறியில் வாழ்ந்து நன்னெறி சேர்வர் என்று பதிகப்பயன் கூறப்படுகிறது.

கல்வெட்டுக்கள் :

இவ்வூர்க் கோயிலில் சோழ மன்னர்களில் விக்கிரமசோழ தேவர், மூன்றாங்குலோத்துங்கசோழதேவர் மூன்றாம்இராசேந்திர சோழதேவர் ஆகியோர் காலங்களிலும், பாண்டியரில்பெருமாள் சுந்தரபாண்டிய தேவர் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல் வெட்டுக்கள் இருக்கின்றன.

திருவுசாத்தானம் என்பது இவ்வூரின் பழம் பெயராய் இருப் பினும், மக்கள் இதைக் கோயிலூர் என்றே வழங்குகின்றனர். இவ்வாறு வழங்கப்பெறுவதற்கு இவ்வூர்க் கல்வெட்டுக்களில் ஆதாரம் கிடைத்திலது. ஆனால் முதலாம் இராசராச சோழரின் இருபத்தொன்பதாம் ஆண்டுவரை பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு ஒன்று தஞ்சை இராசராசேச்சரத்தில் இருக்கிறது. அதில் காணப்பெறும் "இந்நாட்டுப் புறங்கரம்பை நாட்டுக் கோயிலூர் புதுக்குடியாகிய கோதண்டராமச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும்

மானியம் ஒன்று (South Indiau Inscription Volume II Part II Page 431) என்னும் பகுதியால் கி. பி. 1014க்கு முன்னரே கோயிலூர் என்னும் பெயர் இவ்உசாத்தானத்திற்கு வழங்கப் பெற்றுவந்தது என்பது புலனுகிறது.

இறைவரின் திருப்பெயர் :- இவ்வூர்க் கல்வெட்டுக்களில் சிவபெருமான் திருவுசாத்தானமுடைய நாயனுர், திருவுசாத்தான முடையார் என்னும் பெயரால் அழைக்கப்பெறுகின்ருர்.

இறைவியின் திருப்பெயர் :- பெரியநாச்சியார் என்ப தாகும். இச்செய்தி "பிள்ளைபுரோசைக்குடையார் சாக்கான மான கேரளகுலாசனி சதுர்ப்பேதி மங்கலத்து உடையார் திருவு சாத்தானமுடைய நாயனுர் கோயிலில் எழுந்தருளுவித்த திருக் காமக் கோட்டமுடைய பெரியநாச்சியாருக்கு அமுதுபடிக்கும் சாத்துபடிக்கும் உடலாக " என்னும் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராச தேவரின் இருபதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இங்குக் குறிப்பிடப்பெற்ற பிள்ளைப் புரோசைக்குடையார் என்பவர் மூன்ரும்இராசராசசோழனின் இரண்டாவதுமகனுவார். எனவே அம்மனை இக்கோயிலில் எழுந்தருளுவித்தவர் பிள்ளை புரோசக்குடையார் ஆவர். இறைவன்கோயிலில் ஒருபகுதியைத் திருப்பணிசெய்வித்தவர், எழுபத்தொன்பது நாட்டுப்பதினெண் பூமிக்காரரான கற்பகப்பிள்ளையார் ஆவர். மேற்குறித்த கற்பகப் பிள்ளையாரே யன்றி ஆண்டார் பிரசன்ன தேவரும் சிலதிருப் பணிகளைப் புரிந்துள்ளனர்.

எழுந்தருளுவிக்கப்பெற்றதிருமேனிகளும் பிரதிமங்களும் :- திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவரின் முப்பதாம் ஆட்சி யாண்டில் கன்ருப்பூருடையார் இக்கோயில்மேலைத்திருநடமாளி கையில் சுப்பிரமணியபிள்ளையாரை எழுந்தருளுவித்துள்ளார். இம்மன்னனதுஎட்டாம் ஆட்சியாண்டில் பைய்யூர் நாட்டுப் பைய்யுமான் பிச்சன்பல்லவராயனை சோழிய பல்லவரையன் இக்கோயில் மேலைத் திருநடமாளிகையில் பல்லவனிஸ்வரரை எழுந்தருளுவித்த செய்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. இக்கோயில் மேலைத் திருநடமாளிகையில் களரிக்குடையான் பொன்னம்பலக்கூத்தனை இருமுடிச் சோழப்பல்லவரையன் புவனுதி நாச்சியாரையும், மும்முடிச் சோழபுரத்துவியாபாரிகளில் செம்பங்குடையான் திருச்சிற்றம்பல முடையான் கூத்தாடு நாயனுர், இக்கோயிலில் திருஞானம்பெற்ற பிள்ளையாரையும், திரிபுவனச்சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர் காலத்தும் எழுந்தருளுவித்துள்ளனர்.

, வைகாசித்திருநாள்:- இக்கோயிலில்வைகாசிமாதத்தில்விழா நடத்தப்பெற்றுவந்தது. இதை இராசேந்திரசோழ தேவரின் பதினொன்றும் ஆண்டுக் கல்வெட்டு உணர்த்துகின்றது.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள வளநாடு :- அருமொழித் தேவவளநாடாகும் அதுஅளநாடு, ஆர்வலக் கூற்றம், இடையளநாடு, இங்காநாடு, மங்கலநாடு, நென்மலி காடு, புலியூர்நாடு, புரங்கரம்பைநாடு, தக்களூர்நாடு, வலிவலக் கூற்றம், வெண்டாழை, வேளூர்க் கூற்றம் என்னும் பதினொரு பிரிவுகளை உடையதாய் இருந்தது. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வளநாடு, இராசேந்திர சோழவளநாடு என்னும் பெயர் எய்திற்று. அப்பெயரே பிற்காலத்தும் நிலவு வதாயிற்று. இக்காலம், தஞ்சாவூர் ஜில்லாவில் அறந்தாங்கி தாலூகா, நாகப்பட்டினம்தாலூகா இவைகளில் பலபகுதிகளைக் கொண்டதாகும்.

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்ட நாடு :- இவ்வூர், புறங் கரம்பை நாட்டுக்கு உட்பட்டது. பல்லவன் மாதேவிசதுர்வேதி மங்கலம், பெரும்பலமருதூர், களப்பாழ், சிங்களாந்தகச் சதுர் வேதிமங்கலம், கெழுவத்தூர், பனையூர் வன்கொற்றங்குடி, பெரு வாழ்வு தந்தபெருமான் சதுர்மங்கலம், மும்முடிச்சோழபுரம் என்பன இந்நாட்டில் அடங்கிய சில ஊர்களாகும்.

2. திரு இடும்பாவனம்

முத்துப்பேட்டையிலிந்து வேதாரண்யம் செல்லும் பேருந் துச் சாலையில் இத்தலம்உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து தொண்டியக்காடு செல்லும்நகரப்பேருந்தில் இத்தலத்திற்கு வரலாம். முத்துப்பேட்டைப் வாய்மேடு, ஆகியஊர்களிலிருந்தும் இத்தலத்திற்குப்பேருந்துகளில் வந்துசேரலாம்.

தலப்பெருமை :

தென்னைவளம் பெருகியஊர் இடும்பாவனம். அரக்கர் குலத்தில் தோன்றிய இடும்பை பூசித்து நற்பேறுகள் பெற்ற தலம். இடும்பன், இடும்பை உடன் பிறந்தோர். இடும்பனது தலைநகரம் இவ்வூருக்கு அண்மையிலுள்ள குன்றளூர் என்று கூறுவர். இத்தலத்திலுள்ள வெண்மை நிறமுள்ள விநாயகர் தரிசித்தற்குரியவர். பெருமான் அகத்திய முனிவர்க்குத் திருமணக்கோலம் காட்டியருளிய தலம். இன்றும் சிவலிங்கப் பெருமானின் பின்புறம் இறைவனது மணவாளத் திருக்கோலத் தைத் தரிசிக்கலாம். பிரமன், இராமன், அகத்தியர், எமன் ஆகியோர் வழிபட்ட தலம். பிதிர்முத்தித்தலங்களில் ஒன்றாக விளங்குவது.

கோயிலமைப்பு :

இடும்பாவனம் அழகிய சிறிய கிராமம். இவ்வூருக்குப் பெருமை சேர்க்கிறது திருக்கோயில். பேருந்துச்சாலைக்கு அருகில் கோயில் உள்ளது. கோயில் சார்பில் கட்டப்பட்ட மீனாட்சி கல்யாண ஐதிக வளைவு நம்மை வரவேற்கிறது. புதிய பொலிவோடு கோயில் விளங்குகிறது. கோயிலுக்கு எதிரே திருக்குளம் உள்ளது. கொடிமரமும் நந்திபலி பீடங்களும் கோபுரவாயிலில் உள்ளன. மூன்று நிலைக் கோபுரம் கோயிலுக்கு எழில் சேர்க்கிறது. கோபுர வாயிலின் இருபுறங்களிலும் விநாயகர் முருகன் விளங்குகின்றனர். கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் கீழைத்திருமாளப்பத்தியில் சூரியன், அகத்தியர், இடும்பை உருவங்களைக் காணலாம். கன்னிமூலையில் விநாயகர் தனிக் கோயிலில் விளங்குகிறார். மேலைத்திருமாளப்பத்தியில் விநாயகர் சனிபகவான் கஜலக்ஷ்மி உள்ளனர். வடமேற்கு மூலையில் முருகன் தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளார். ஈசானத்திசையில் பைரவர், சந்திரன் உள்ளனர். கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தியும் மேற்கே லிங்கோத்பவரும் வடக்கே பிரமன் துர்க்கை ஆகியோரும் உள்ளனர்.

மகாமண்டபத்தில் வெள்ளைவிநாயகர் சந்நிதி உள்ளது. தெற்குநோக்கி அம்பாள் சந்நிதி திகழ்கிறது. அடுத்து நடராஜா பஞ்சமூர்த்திகள் உள்ளனர்.

மூர்த்திகள் :

விநாயகர் – வெள்ளை விநாயகர் என்ற பெயரை உடையவர். கோயிலுக்குள் இவர் எழுந்தருளி விளங்குகிறார். இறைவன் திருப்பெயர் அருள்மிகு சற்குண நாதேசுரர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு மங்களநாயகி. மற்றும் சுவாமிக்குப் பின்னால் உள்ள இறைவனது. திருமணக்கோலக் காட்சி சிறப்புடையது. இடும்பை குறுமுனிவர் திருவுருவங்கள் தரிசித்தற்குரியன. தலமரம் – வில்வம். தீர்த்தம் – சீதபுட்கரிணி, மோக்ஷபுட்கரிணி, பிரமதீர்த்தம் – குசுமபுட்கரிணி, எமதீர்த்தம், அகத்திய தீர்த்தம் முதலியன. வைகாசி விசாகம் பெருவிழா நிகழ்ந்து வருகிறது.

புராணவரலாறுகள்.

பிரமன் பூசித்தது :

நான்முகன் உலகைப் படைத்தற்கு வேண்டும் வலிமையைப் பெறுதற்கு வில்வ வனமாக விளங்கிய இத்தலத்தை அடைந்து செஞ்சடைக் கடவுளின் சேவடிகளைச் சிந்தையில் வைத்துப் பல்லாயிரம்ஆண்டுகள் அருந்தவம் இயற்றினான்.

இறைவன் வெளிப்பட்டு பிரமனுக்கு இன்னருள்புரிந்தார். தனக்கு அருள்புரிந்த அத்தயாநிதிக்கு அயன் கோயில்எடுத்தும், குளம் அகழ்ந்தும், விழாக்கள் கொண்டாடியும் போற்றினன்.

இடும்பை வரலாறு :

அரக்கர் குலத்தைச் சேர்ந்த இடும்பன் இடும்பை ஆகியோர் ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர். வில்வவனமாக விளங்கிய இவ்வூரிலும் ஏனைய காடுகளிலும் திரிந்து விலங்கு பறவைஆகிய வைகளையும் மனிதரையும் கொன்று தின்று உயிர் வாழ்ந்து வந்தனர். அவர்களில் இடும்பை முற்பிறப்பில் நல்வினைகள் செய்திருந்தகாரணத்தால் இத்தலத்தில் பிரமனமைத்தகோயிலில் விளங்கும் பெருமானைக்கண்டு அவர் மேல் பக்தி செலுத்தி வந்தாள். வழிபட்டதால் அவள் மனம் தூய்மைபெற்றது.

ஊன் உணவை விடுத்து காய் கனிகளை உண்டும் பண்பா டுகள் பலவற்றைப் பெற்றும் உயிர் வாழ்ந்து வந்தாள். அரக்கு மாளிகைக்குள் அகப்படுத்திப் பாண்டவர்களை அழிக்கத் திட்ட மிட்ட துரியோதனனின் வஞ்சகத்தை அறிந்தவீமன் அம்மாளி கையிலிருந்து சுருங்கைவழி செய்து தம்உடன் பிறந்தோர்களை யும் தாயையும் வெளிக் கொணர்ந்து காப்பாற்றினன். வீமன் அவர்களை வெளியில் கொண்டு வந்த இடம் இடும்பாவனம்.

வீமனைத் தனியே கண்ட இடும்பை அவனை மணந்து கொள்ள விரும்பினள், வீமன் மறுத்தான். வியாசமுனிவர் இடும்பை வீமன் இருவரும் முற்பிறப்பில் அரசகுடும்பத்தில் பிறந்து கணவனும் மனைவியுமாக வாழ்ந்தவர்கள் என்றும் இடும்பை சிவனடியார் தோற்றத்தை இகழ்ந்த குற்றத்தால் அரக்கர் குலத்தில் தோன்றினள் என்றும், அவனை மணந்து கொள்ளுமாறும்கூறி இடும்பையைச் சீதபுஷ்கரிணியில் மூழ்கச் செய்து பேரழகுடையவளாக்கி இருவர்க்கும் மணம் முடித்து வைத்தார். இருவரும் சற்குணநாதரை வழிபட்டுத் திருமணம் கொண்டு ஓராண்டு இத்தலத்தில் வாழ்ந்து சென்றனர். இடும்பை வழிபட்டு நல்வாழ்வு பெற்றதால் இத்தலம் இடும்பாவனம் எனப்பெயர்பெற்றது.

இயமனுக்கு அருளியது :

இறைவன் தன்னை அன்போடு வழிபட்ட மார்க்கண்டே யரின் உயிரைக் கொண்டு செல்லவந்த இயமனைக் காலால் உதைத்துக் கொன்றதையும் பின் திருமால், பிரமன், நிலமகள் முதலிய தேவர்கள்வேண்ட அவனைஎழுப்பியதையும் அனை வரும் அறிவர். உயிர் பெற்றெழுந்த எமன் தன் கடமைகளைச்

செய்யமுற்பட்டபோது தன் சக்தியெல்லாம் இழந்திருப்பதை உணர்ந்தான். இழந்த தன்சக்தியை அருளும்படி இறைவனை வேண்டினன். பெருமான் இடும்பாவனம் சென்று தன்னைவழிபடுமாறு கூறினர். அவ்வாறே அவன் இத்தலத்துக்குவந்து சற்குண நாதரை ஒருமாத காலம் வழிபாடுசெய்து தனது ஆற்றலை மீளப் பெற்றான். எமன் நீராடிவழிபட்ட தீர்த்தம் எமதீர்த்தம் என வழங்குகிறது.

பிதிர் முத்தித் தலம் :

ஒரு மனிதன் தன் தாய்தந்தையரை நினைத்து பிதிர்க்கடன் செய்யக் கடமைப்பட்டவனாவான். பிதிரர் வழிபாடு சிறந்த தீர்த் தங்களிலும் சிறந்ததலங்களிலும் செய்தற் குரியது. புண்ணிய தினங்களில் இதனைச்செய்தால் தன் முன்னோர்களில் இருபத் தொருதலைமுறையில் உள்ளவர் முத்தியடைவர் என்று சாத்திரம் கூறுகிறது. இத்தலம் பிதிர்க்கடன் செய்தற்குரிய தலங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

தண்டபாணி என்பவனொருவன் இளமையில்பல்வகையான பாவங்களைச் செய்து முன்செய்த புண்ணியம் கைகூடியதால் இத்தலத்துக்கு வந்து திருவேணி என்னும் பெண்ணை மணந் தான். இருவரும் சற்குண நாதரை வழிபட்டு விரதாதிகளை மேற் கொண்டு தீர்த்தமாடியும் ஐந்தெழுத்து ஓதியும் வாழ்ந்து மறைந் தனர். அவர்களுடை முன்னோர்கள் பிதிரர் உலகில் அவர்களைப் பாராட்டி இடும்பாவனத்தில் தீர்த்தநீராடி இறைவனை வழிபட்ட தால் தாங்கள் நற்கதியில் உள்ளனர் எனக்கூறி வாழ்த்தினர்.

குறுமுனிக்குத் திருமணக்கோலம் காட்டியது :

சிவபெருமான் இமவான் மகளாகிய பார்வதிதேவியை அவனது நகரில் திருமணம் கொண்டருளியபோது எல்லாத் தேவர்களும் வந்து நிறைந்ததால் வடதிசைதாழ்ந்தது; தென் திசை உயர்ந்தது இறைவன் அகத்தியரை அழைத்து தென் நாட்டிலுள்ள பொதியமலைக்குச் செல்லுமாறு பணித்தார். அகத் தியர் இறைவனது திருமணத்தைக்காணாமல் தென்திசை செல்ல நேர்கிறதே என்றுவருந்தபெருமான் தென்னாடு செல்லும்போது இடும்பாவனத்தில் நமது திருமணக்கோலத்தை உமக்குக்காட்டி யருளுவோம் கவலற்க, என அருளினர். அவ்வாறே குறுமுனி யாகிய அகத்தியர் இத்தலத்தை அடைந்து நீராடி சற்குண நாதரை வழிபடும் வேளையில் இறைவன் தமது திருமணக் கோலத்தை இத்தலத்தில் அகத்தியர்க்குக் காட்டியருளினன். இவ்வரலாற்றால் இத்தலம் மணக்கோல நகர் என்ற பெயரையும் பெற்றது. அகத்தியர் உண்டாக்கிய தீர்த்தம் அகத்திய தீர்த்தம்

என்ற பெயரோடு விளங்குகிறது. அகத்தியர் திருவுருவம்திருக் கோபுர வாயிலின் உட்புறம் இறைவனைநோக்கி விளங்குகிறது.

இராக்கதமோக்ஷம் :

அகத்தியர் இத்தலத்தில் வாழ்ந்தகாலத்தில் பாவங்களால் அரக்கர் வடிவம் பெற்ற தேவசருமன் என்ற அந்தணனுக்கும் அவன் மனைவிக்கும் தன் கமண்டல நீரைத் தெளித்து உபதேச மளித்து சற்குணநாதரை வழிபடச் செய்து மோக்ஷமளித்தார்.

யோகீசுரர்முத்தி :

இடியேறுண்டிறந்ததால் யோகீசுரன் நரகத்துன்பம், அடைந் துவருந்தினன். அவன்மகன் குணபரன் என்பவன் பெரியவர் ஒருவர் சொற்படி தன்தந்தையின் அஸ்தியை எடுத்துத் தீர்த்த நீராடி வரும்போது திருமுதுகுன்றத்தில் பொன்னுகவும், திரு மறைக்காட்டில் தாமரையாகவும் திருக்கடிக்குளத்தில் கொன றையாகவும் அஸ்தி மாறியது. இத்தலத்திற்கு வரும்போது அஸ்தியில் தன்தந்தையின் உருவம்தோன்றி மைந்தனை வாழ்த்தி வீடுபெற்றது. குணபரன் மகிழ்ந்து சீதபுஷ்கரணியில் நீராடி சற்குணநாதரை வழிபட்டுமகிழ்ந்தான்.

தேவாரத் திருப்பதிகம் :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளியதேவாரத்திருப் பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் அருளிய ஒரு திருத்தாண்டகப் பாடலும் உள்ளன. ஞானசம்பந்தர் பதிகம் திருமறைக்காட்டி லிருந்து பாண்டி நாட்டிற்குச் செல்லும்போது எழுந்தருளிப் பாடியதாகும். இத்தலம் பொழில்களாலும் விளைநிலங்களாலும் சூழப்பட்டது என்றும் இறைவர்க்குரிய இடம் என்றும், அடிய வர்களும், சிவானுபூதியிற் சிறந்தோரும் வழிபடும்தலம் என்றும் கூறுகிறது. இத்தலத்திருப்பதிகத்தை ஓதுவார்வினை மறையும் எனவும் கூறப்பெற்றுள்ளது.

3. திருக்கடிக்குளம்

தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ளது திருக்கடிக்குளம். கடிக்குளம் கற்பகநாதர் குளம் என வழங்கப்பெறுகிறது. இடும்பாவனத்துக்கு கிழக்கே 2 கி. மீ. தூரத்திலுள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து தொண்டியக் காடு செல்லும் பேருந்தில் சென்ருல் இத்தலத்தில் கோயிலுக்கு அருகில் இறங்கலாம். முத்துப்பேட்டையிலிருந்தும், வாய்மேட்டி லிருந்தும், தில்லைவளாகத்திலிருந்தும், இத்தலத்திற்குப்பேருந் துக்களில் வரலாம். முத்துப்பேட்டை – வேதாரண்யம் சாலையில்

உள்ளது. மாயூரம் – அறந்தாங்கி இருப்புப்பாதையில் பாண்டி என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே 6 கி. மீதூரம் செல்லவேண்டும்.

தலப்பெருமை :

கற்பகவிநாயகர் சிவபெருமானை வழிபட்டு மாங்கனி பெற்ற தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகத்தைப் பெற்றது. கற்பகநாதர் எட்டுப்பட்டைகளோடுகூடிய சிவலிங் கத்திருவுருவில் காட்சி தருகிறார். தீர்த்தப் பெருமையுடைய தலம் எனபதைத் தலப்பெயர் உணர்த்தும்.

கோயிலமைப்பு :

அழகிய சிறியகிராமம். பேருந்துச் சாலையிலிருந்து தெற்கே சிறிதுதூரம் சென்றால் கோயிலை அடையலாம். கிழக்குநோக்கிய சந்நிதி. கோயிலின் வடபால் தீர்த்தம் உள்ளது. கொடிமரம் நந்திபலிபீடங்கள் கோபுரவாயிலில் உள்ளன. மூன்று நிலைக ளுடன் இராஜகோபுரம் விளங்கிறது. கோபுரவாயிலில்விநாயகர், முருகன் உள்ளனர். திருப்பணி தொடங்கப் பெற்றுள்ளது. கோயிலின்முன்னால் ஆஸ்தான மண்டபம் அடித்தளம் இடப் பெற்றுள்ளது இம்மண்டபம் நிறைவுபெற்றால் கோயில்தனி யழகுபெறும். மூர்த்திகள் பலவும் பாலாலயம் செய்யப் பெற் றுள்ளன. சுவாமி அம்பாள் கோயில்களின் கர்ப்பக்கிருக விமானங்கள் தனியழகுடையன. நல்லநிலையில்உள்ளன. ஒரே பிராகாரம். மேற்குத் திருமாளப்பத்தியில் சமயாசாரியர் இஷ்ட சித்திவிநாயகர், முருகன், கஜலக்ஷ்மி ஆகியோர் உள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் தலமரம் பலா உள்ளது. சனிபகவான்' பைரவர் பாலாலயம் செய்யப் பெற்றுள்ளனர். கிழக்கே சூரியன், சந்திரன் உள்ளனர். சுவாமி 8பட்டைகளோடுகூடிய சிவலிங்கத் திருவோடு விளங்குகின்றார். அழகிய சிறிய திருவுருவம் கோபுர வாயிலில் அம்பாள்சந்நிதி தெற்குநோக்கி உள்ளது. அம்பிகை கருணை மிகுந்த திருமுகமண்டலத்தோடு காட்சி தருகிறார். கோயிலுக்குத் தெற்கே கோதண்டராமர் கோயிலும் அருகில் மாங்கனிபெற்ற பிள்ளையார்கோயிலும் உள்ளன. இத்தலத் துக்குக்கிழக்கே 2 கி. மீ தூரத்தில் துளசியாம்பட்டினம் உள்ளது. இங்கு ஔவைஉப்பை கோயில்கள்உள்ளன. ஔவையாருக்கு இவ்வூரில்தான் தனிக்கோயில் உள்ளது' ஆண்டுதோறும் சிறப்புவிழா நடத்தப்பெறுகிறது.

மூர்த்திகள் :

சுவாமி திருப்பெயர் அருள்மிகு கற்பகநாதர், கற்பகேசுரர் எனவும் கூறப்படுகிறார். அம்பிகை திருப்பெயர் :அருள்மிகு

சவுந்தரநாயகி, பாலசவுந்தரி எனவும் வழங்கப் பெறுகிறார் விநாயகர் கற்பகவிநாயகர், இஷ்டசித்தி விநாயகர், மாங்கனிப் பிள்ளையார் எனப்பெயர் தரித்துள்ளார். அருகிலுள்ள கோதண்ட ராமர்கோயில் தரிசித்தற்குரியது. தலமரம் – பலா. தீர்த்தம் – விநாயகதீர்த்தம். கடிக்குளம் எனப்பெறுவதும் இதுவேயாகும்.

ஔவைகோயில் :

கடிக்குளத்துக்குக்கிழக்கே 2. கி. மீ தூரத்தில் வேதாரண்யம் வட்டத்தில் துளசியாம்பட்டினம் என்ற ஊரில் ஔவைகோயில் உள்ளது. தஞ்சையை ஆண்ட துளசாமகாராஜாவால் கட்டப் பெற்றது. ஔவைகொல்லன் திடல் என்ற ஊரில் தங்கியிருந்த போது வெள்ளம் அவ்வூரைச் சூழ்ந்து கொண்டது என்றும் அங்கிருந்த கொல்லன் ஔவையை வேறு இடம்நாடிச் செல்லு மாறு வேண்டியதாகவும், ஔவை இறைவனை வேண்டிப்பாட வெள்ளம் வளவனாற்றின் மூலம் வடிந்ததாகவும், கூறுகின்றனர். துளசியாம்பட்டினத்தில் தான் முருகப்பெருமான் சிறுவனாய் வந்து சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா என்று கேட்டு அவர்க்கு அருள்புரிந்ததாகவும் கூறுகின்றனர். துளசா மகாராஜா காசிசென்று அங்கிருந்து கொண்டுவந்த விசுவ நாதரைப் பிரதிட்டைசெய்து மகப்பேறு பெற்றார். அக் குழந்தைக்குச் சரபோஜி என்று பெயரிட்டார். தமிழ்மூதாட்டி ஔவைக்குக் கோயில் எடுத்து வழிபட்டார். ஆண்டுதோறும் இங்கு பங்குனிச்சதயத்தில் ஔவைவிழா சிறப்பாக நிகழ்கிறது.

புராணவரலாறு :

கார்த்திகார்ச்சுனன் என்னும் அசுரன் ஒருவன் வழிபட்டு வரங்கள்பலவும் பெற்று தமக்குக்கற்பகமாக உதவியருளிய கற்பகநாதரைத் திருக்கோயில் எடுத்து வழிபட்டான்.

மாங்கனிபெற்றது :

நாரதர்திருக்கயிலாயம் சென்று மூவுலகங்களிலும்கிடைத்தற் கரிய மாம்பழமொன்றைச் சிவபெருமானுக்குத் தந்தருளி இதை ஒருவரே உண்ணவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பெருமான் நாரதரின் குறிப்பறிந்து அப்பழத்தைத்தானுண்ணாமல் தம்மைந்தராகிய பிள்ளையாருக்கோ முருகப்பெருமானுக்கோ தரவிரும்பி தம் மைந்தர்க்குள் ஒருபந்தயம் வைத்தார். ஏழுலகங் களையும் முதலில் சுற்றிவருபவர் எவரோ அவருக்கு இப்பழம் உரியது என்று கூறினார். முருகப்பெருமான் ஒரு நொடியில் ஏழுலகங்களையும் சுற்றிவருகிறேன் என்று அவசரப்பட்டு மயில் மீது ஏறி உலாவரத்தொடங்கினார். பிள்ளையாரோ தமது சரீரமும்

தம்வாகனமும் அதற்குச் சரிவராது எனக்கருதிச் சிந்தித்து எல்லா உலகங்களையும் தம் வடிவாகவுடைய சிவபெருமானையே ஒருமுறை சுற்றிவந்துபந்தயத்தில் வெற்றிபெற்று மாங்கனியைத் தந்தையிடம் பெற்று அருந்தினர். பிள்ளையார் தந்தையை வலம் வந்து அவரிடம் மாங்கனி பெற்று உண்டதலம் திருக்கடிக்குளம் என்று கூறுவர். இத்தலத்தில் விளங்கும் விநாயகருக்கு மாங்கனிப்பிள்ளையார் என்று பெயர். இத்தலத்திலிருந்தே துதிக்கையைநீட்டி மாம்பழத்தை இறைவனிடம் பெற்றுர் என்று கூறுவர். பின்னல் வந்த முருகப்பெருமான் பழம் கிடைக்காததால் பழனியில் தண்டபாணியாக ஆனுர் என்பர்.

ஸ்ரீ கோதண்டராமர் :

இராமர் இலங்கைசெல்லத் திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்தில் அணைகட்டமுயன்றுர். திருஉசாத்தானத்தில் இறைவனிடம் மந்திர உபதேசம் பெற்றுர். அவ்வாறுஅணைகட்ட வேதாரண்யம் வந்தபோது இத்தலத்திற்கு வந்து கற்பகநாதரின் அருளைப்பெற்றுர். கோதண்டராமர் ஆலயம் கற்பகநாதர் ஆலயத்தின் அருகில் உள்ளது. இராமர், இலக்குமனர், சீதை, அநுமார், திருமங்கை ஆழ்வார் திருவுருவங்கள் உள்ளன.

கடிக்குளம் :

இவ்வூருக்குப் பெருமை தரும் தீர்த்தமாக விளங்குவது கடிக்குளம் என்னும் விநாயக தீர்த்தமாகும். ஒரு பெரியவர் தன் தந்தைக்குப் பிதிர்க்கடன் செய்யக் கொண்டு வந்த அஸ்திகள் இங்குக் கொன்றை மலராக மாறியது என்று கூறுவர்.

தேவாரம் :

திருஞானசம்பந்தர் சமண சமயத்தை அழித்துச் சைவத்தின் பெருமையை நிலைநாட்டத் திருமறைக் காட்டிலிருந்து பாண்டிய நாடு செல்லும் போது எழுந்தருளி வழிபட்ட தலம். அவர் அருளிய இத்திருப்பதிகம் மிக்க சிறப்புடையது. கடிக்குளத்து உறையும் கற்பகத்தை வழிபடின் பழவினைகள் மூளா என்றும், கேடு நீங்கும், பழிசாராது புகழுண்டாகும் என்றும் துன்பங்கள் தொடரா என்றும் வினைகள் தேயும் என்றும் நற்றவம் கைகூடும் என்றும், வினைகள் பற்றறக்கெடும், மேல் வினை மூளா என்றும் நற்குணங்களை அடையலாம் என்றும் நல்வழி கிடைக்கும் என்றும்கயிலையில் இறைவனேடு கலந்து முத்தியுலகில்வாழலாம் என்றும் கூறியருள்கிருர்.

கட்டுரை எண். 24

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.

கொள்ளேன் மனத்தில் நின் கோலமல்லாது; அன்பர் [கூட்டந்தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு
உள்ளே! அனைத்தினுக்கும் புறம்பே! உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியவென் கண்மணியே! 23

அ. வியன் மூவுலகுக்கு உள்ளே !

(1) விரிந்தகன்ற மூவுலகங்களுக்கும் உள்நின்று உறையும் பொருளே அல்லது அந்தர்யாமியான வஸ்துவே என அழைக்கிறார்.

(2) வியன் மூவுலகாயும் விரிந்து, தானே அவற்றின் உள் நின்று உறையும் பொருளாகவும் அம்பிகை இருக்கிறாள். உள்ளே இருப்பதனாலும் அவளுக்கு ‘ அந்தரி ’ என்னும் பெயர் ஏற்பட்டிருப்பதாக முன்னரே கண்டோம்.

(3) ‘ சர்வாந்தர்யாமினி ’ – ‘ அனைத்தினும் உள்ளே இருப்பவள் ’ என்கிறது லலிதா சகஸ்ரநாமம்.

ஆ. அனைத்தினுக்கும் புறம்பே !

(1) அவையனைத்தையும் கடந்து நிற்கும் வெளியானவள்.

(2) உள்ளாகித்திகழ்பவளே, வேறாகியும் விளங்குகிறாள்.

எனவே சகஸ்ரநாமமும் ‘ சர்வாதீதா ’ – ‘ எல்லாவற்றையும் கடந்தவள் ’ எனப் புகழுகிறது.

(3) “ பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி, இத்தனையும்

வேருகி......" என திருவெம்பாவையில் மணிவாசகர் அனைத்துமானவன் வேருகும் இயல்பினைக் குறிப்பிடுகிருர்.

(4) " அகத்ூடு அணு அணுவாய்அண்டமெல்லாம்தாணுய்
மகத்தாகி நின்றனை நீ வாழிபராபரமே "

என்று பராபரக் கண்ணியில் தாயுமானவர் பாடுகிருர்.

இ. உள்ளத்தே விளைந்த கள்ளே !

(1) உள்ளத்தில் விளைந்த இனிய தேனுகவும் இருக்கிருள் அம்பிகை. 'கள்' அல்லது 'மது' என்ற சொல் தேனினைக் குறிக்கும். ('மதுமலர்' என்பதும் 'கள்ளிருக்கும் மலர்க் கூந்தல்' என்பதும் இதனைத் தெளிவாக்கும்.)

(2) அன்னையின் சொருபத்தியானத்தினுல் எய்தும் ஆனந் தானுபவம் கள்ளாய், தேனுய் இனிக்கிறது.

அந்த ஆனந்தானுபவத்தில் அபிராமிபட்டர் திளைத்திருந்த நிலையினைக் கண்ட அவரது ஊரினர் அவரைக் ' கள் குடிப்பவர் ' எனவும் தவருக எண்ணினர்.

" நான் அருந்தியது மலரில் விளைந்த மதுவல்ல ! தென்னையில் விளைந்த கள்ளுமல்ல ! உள்ளத்தே விளைந்த ஆனந்தத்தேன் எனத் தெளிவுபடுத்துகிருர். அத்தேனுகவும், அதன் இனிமையாகவும் இருப்பவள் அன்னை.

(3) 'மதுமதி' எனவும் அவளுக்கு ஒரு நாமம் உண்டு. அதனை விளக்கும் உரையாசிரியர் பாஸ்கரராயர் அம்பிகையின் வடிவமே தேன் போன்றது என வேதவாக்கியத்தினை மேற் கோள் காட்டித் தெளிவாக்குகிருர்.

(4) " எத்திக்கும் தானுகி என் இதயத்தே ஊறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே "

என்ற தாயுமானவரின் அடிகள் இதயத்தே விளையும் தேனுய் இறைவனைக் குறிக்கின்றன.

ஈ. களிக்குங் களியே !

(1) அவ்வாறு விளையும் தேனின் சுவையால் அன்பர் மகிழ்வதற்கு ஏதுவாகிய மகிழ்ச்சியாய் இருப்பவளும் அவளே.

(2) " துஷ்டி " – ' மகிழ்ச்சி வடிவினள் ' என்றும் அவளே களிக்கும் களியாகவும் இருப்பதையும் சகஸ்ரநாமம் குறிப் பிடுகிறது.

(3) " தீம் பழந்தன்னில் சுவையே சத்தி " எனவும்,
" பாட்டினில் வந்த களியே சக்தி " எனவும்,
" இன்ப வடிவாகி நிற்பவள் " எனவும்,
" இன்பமே வடிவாகிடப் பெற்ருள் "

எனவும் பாரதியார் தன் சக்தி பாடல்களில் எளிமையாய்க் குறிப்பிடுதல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

உ. அளிய வென் கண்மணியே !

(1) இரக்கத்திற்குரிய எளியேனது கண்ணின் மணியாக இருப்பவளும் அபிராமியே என்கிருர்.

(2) அன்புக்கும், அருமைக்கும் உரியவர்களை நாம் என் ' கண்மணி ' என்று அழைப்போம். மெய்யடியார்களுக்கு இறைவன் அல்லது இறைவியே அன்புக்கும் அருமைக்கும் உரியவர் ஆதலால் அவர்களை அங்ஙனம் அழைப்பர்.

அவ்வாறு ' கண்மணி ' என்று ஒருவரைப் போற்றும் அன்பர் அவரைப் பற்றியே எப்போதும் சிந்தித்து வேறு ஒன்றிலும் நாட்டமின்றி இருத்தலும் இயல்பு. அதனைப் பாடலின் முற்பகுதி குறிப்பிடுகிறது.

ஊ. கொள்ளேன் மனத்தில் நின் கோலம் அல்லால் !

(1) எனது உள்ளத்தில் நினது திருவுருவக்கோலம் அன்றிப் பிறிதொன்றையும் உள்கொள்ளேன் என்கிருர்.

(2) அன்புக்கும் அருமைக்கும் உரியதாகிவிட்ட உனது சொருபதியானமல்லாது வேறு எதனையும் தியானிக்கமாட்டேன் என்கிருர். அவ்வூரார் எண்ணியது போல் வேறு துர்தேவதை களைத் தியானித்து களித்து மயங்கவில்லை என்பது மீண்டும் தெளிவாகிறது.

எ. அன்பர் கூட்டம்தன்னை விள்ளேன் !

(1) உன் அடியவர் கூட்டத்தினைப் பிரியமாட்டேன்.

(2) ஒரு பொருளினிடத்தில் பற்று மிக உடையவர் அதன் பால் அதிகப்பற்றுடைய பிறருடன் தொடர்பு கொண்டு பழகு வதையே விரும்புவர். எடுத்துக்காட்டாக இசையன்பர் பிற இசை அன்பர்களின் கூட்டுறவினைப் பெரிதும் விரும்புவர். அவ்வாறே மெய்யன்பர் மெய்யன்பர் கூட்டத்தைப் பிரியா திருப்பது இயல்பு.

(3) முன்னரே உரைகண்ட பெரியார் அனைவரும் இங்கு எடுத்துக் காட்டும் திருவாசகப் பாடல் வருமாறு.

கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு, குடிகெடினும்
நள்ளேன் நினது அடியா ரொடு அல்லால் நரகம்புகினும்
எள்ளேன் திரு அருளாலே இருக்கப் பெறின், இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது எங்கள்
[உத்தமனே !

ஏ. பரசமயம் விரும்பேன்

(1) வேறு சமய நெறிகளை விரும்பமாட்டேன்.

(2) சக்தி நெறி பற்றி நின்ற அபிராமிபட்டர், திருமூலர் போன்ற சைவச்சான்றோர் வழி நின்ற 'சிவயோகி' யாவார்.

கடவூர் 'காலசம்ஹார' மூர்த்திக்குப்பதிகம் சூட்டியவர்.

'கள்ள வாரண விநாயகப் பதிகம்' பாடிக் கணபதியினை வணங்கியவர்.

'முதறிவின் மகன்' என்று முருகனைப் புகழ்ந்தவர்.

'அலையாழி அறிதுயிலும் மாயன்' எனவும், 'செங்கண் மால்' எனவும் திருமாலையும் புகழ்ந்தவர்.

ஆதித்தன் அம்புலி என்று பட்டியல் போட்டு "சாதித்த புண்ணியர்" என்று அவர்களுக்குச் சான்று கொடுத்தவர்.

சமயப் பொறையுடைய சான்றோராகிய அபிராமிபட்டர் இங்குப் "பரசமயம் விரும்பேன்" என்று கூறுவதன் உட் கருத்து நன்கு சிந்தித்து உணரவேண்டிய ஒன்றாகும்.

புத்த சமணர்களின் பாதிப்புக்கு உள்ளான காலத்திலும் இல்லாதவர் அவர்.

அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு இணைத்துப் பொருள் கொண்டால் அவர் பரசமயம் என்றது இந்து சமயத்தின் இரண்டு உடபகுதிகளை என்பது தெளிவாகும்.

ஒன்று விரைவில் பலன் அளிக்கும் தீய சக்திகளை வழிபடும் (துர்தேவதைகளை உபாகஸிக்கும் அபிசார மார்க்கம்) மாந்ரீகர்களின் சமயம்

மற்றொன்று அந்நாளில் அவர் சந்திக்க நேர்ந்த இறையெண்ணம் இன்றி வெறும் கர்ம மீமாம்சத்தைப் பின் பற்றியவர்களின் நெறியாகும் (தாருகா வனத்து முனிவர்களின் வழி மற்றும் சங்கரர் காலத்து மண்டல மிச்ரரின் நெறி. இவை ' அறிந்தேன் எவரும் அறியா " – என்ற பாடலின் விளக்கத்தில்' விரிவாகக் கூறப்பட்டது.)

" அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சினர் " என அவர்களை அபிராமிபட்டர் குறித்தார்.

கர்மபடர்கள் 'யோகி' யான பட்டரைத் தங்கள் வழி நில்லாத காரணத்தால் " துர்தேவதை உபாஸகன் " என இகழ்ந்தனர். இச்செய்திகளுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் பொழுது, 'பரசமயம்' என்றது கீழ்ச்சமயங்களான கர்ம மீமாம்ச நெறி மற்றும் அபிசார அல்லது மாந்திரீக நெறிஎன்பது தெளிவாகும்.

(3) மற்றும் தான் வழிபடும் தெய்வத்தினை என்றும் சிக்கெனப் பிடித்திருத்தலே மெய்யடியார்களின் இயல்பு என்ற நிலையிலும் 'பரசமயம்' விரும்பேன் என்றார்.

இப்பாடலின் பாராயண பலன் மனக்கவலைகள் நீங்கி மகிழ்ச்சி எய்துதல் ஆகும்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

வேளூர் தேவஸ்தானம் வைத்தீசுவரன்கோயில்

உள்ளப்பிணியை நீக்கும் அருமருந்தாம் அருள்மிகு வைத்தீசுவரன்கோயில் தரிசனம் கண்டேன்! எல்லையிலா மகிழ் வெய்தினேன்! ஆதீனகர்த்தாவுக்கும் திருமடத்தாருக்கும் என் பணிவன்பான நன்றி. வாழ்க எஞ்ஞான்றும் அவர்கள் தூய தொண்டு! தெய்வ உள்ளம்.

19—2—82 (ஒ-ம்) ஜஸ்டிஸ் ச. மோகன்.

குடமுழ நந்தீசன்

நக்கீரன் வழியடிமை,

புலவர் திரு. பி. மா. சோமசுந்தரம்.

(மலர் 41, இதழ் 3, பக்கம் 139 இன் தொடர்ச்சி)

5. நந்திகள்

மேற்காட்டிய மறைமலையடிகளார் ஆராய்ச்சியிற் கண்ட உண்மையை மறுக்க மாட்டாதார் நால்வரே நந்திகள் என்று திருமூலர் அறிவுறுத்துவதாகக் கொண்டு அந்நந்திகள் நால்வரும் நான்கு திசைக்கு ஒரு நாதராகச் சென்றமையை அன்றி அவர் தம்முள் ஒருவர் மாணிக்கவாசகராகப் பிறந்தமையைத் திருமூலர் செப்பாமையால் நந்திதேவரே மாணிக்கவாசகர் எனல் கூடாது என்றொரு போலி மறுப்பினை எழுப்பி மகிழ்வர். திருமந்திரப்பாடல் திருமூலருடன் பயின்றோரை உணர்த்துவதே யன்றி நந்திகளின் தொகை கூறுவதன்று என்பதை இன்னோர் புலங்கொளாதிருத்தலும் வியப்பே. " தமிழ்மூவா யிரஞ்சாத்தி, மன்னிய மூவாயிரத்தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்த " திருமூலர் கூறும் வரலாறு அவர் காலத்துக்கு மூவாயிரத்தாண்டு முற்பட்டதாமேயன்றி இற்றைக்கு ஈராயிரத்தாண்டுக்குட்பட்ட மாணிக்கவாசகர் செய்தியை இயம்பும் திறத்தது ஆகாது என்பதனையும் இன்னோர் தெளிதல் வேண்டும். இன்னோர் கோட்பாட்டின்படி நந்திகள் நால்வரே எனக் கொள்ளினும், திருமூலரை இடையன் குரம்பையில் புகவைத்த இறைவன் அந்நந்திகளுள் ஒருவரைப் பிற்றைஞான்று மாணிக்கவாசகராகத் தோற்றும்படி செய்தல் கூடாமையாதல் யாங்ஙனம் ? இப்பிற்றை நாள் வரலாற்றைத் திருமூலர் கூறாமையால் வருவதோர் இழுக்கு யாது ? அன்றியும் கணநாதர் பலர் என்பது பெரியபுராணம் முதலாய சிவநெறி நூல்களில் செப்பப் படுவதென்பதும் உணரற்பாற்றே.

6. குடமுழா முழக்குவோர்

தமிழ் வரலாறுடையார் அந்நூல் பக்கம் 98 – இல் " அப்பர் சுவாமிகள் தமிழர் ஆயினும் அவர் ஒருவர் மட்டும் உண்மையை அறிந்து சொன்னார் என்பது பொருத்த முடையதாமா ? "

என்றொரு வினத்தொடுத்துள்ளார். இவ்வினவே அப்பர் திருமொழி நந்திதேவரைக் குறிப்பதே என்பதைக் கூறுமல் கூறுகின்றது. முதற்கண் தமிழர் யாருங் கூறிற்றிலர் என்றவர் அப்பராகிய தமிழர் கூறினர் என்பதையும் இதனல் இசைந் தாராயினர். திருவருட்டடங் கடலில் திளைக்கும் அப்பர் பெருமானுக்கும் பிறவிப்பெருங் கடலில் திளைக்கும் ஏனேர்க்கும் உள்ள வேறுபாட்டை உணராமையால் போலும் இவ்வின எழுந்தது ! அப்பருக்கு நிகரான வேறு எவர் மாணிக்கவாசகர் பற்றிப் பேசியுள்ளார் ? அவர் நந்திதேவரல்லர் என்று மறுத் துள்ளார் எவருமிலர். தொல்காப்பியம் முதலிய தொன்னூல் உணர்ச்சியோ, இவரே கூறுமாறு மனம் போனவாறு புனையப் பட்டுப் பொய்களே மலிந்து காட்சிதரும் புராணங்களின் உணர்ச்சியோ நந்திதேவரே மாணிக்கவாசகர் எனலை உணர்த் தாது. எண்குணம் கைவரப்பெற்ற அப்பரடிகள் ஒருவரே அதனை உணரமுடியும். உணர்ந்து நமக்கு உணர்த்த முடியும் என்பதால் நேரும் தவறு யாதோ ? அப்பர் பெருமான் மாணிக்க வாசகருக்குக் காலத்தால் அண்மையர். புராணம் புனைந்தோர் சேய்மையர். அப்பர் மொழிகள் தமிழ்மறை. சிவபிரானல் ஆட்கொள்ளப்பட்ட பெரியாராகிய அவருரையைப் பொய் புகலுந்திருவுடைய புராணவுரைகளால் மறுக்கப்புகுதல் இரும்பை எறும்பரிக்கப் புகுதலையே இயையும் என்க.

நந்தியெம்பெருமானுக்குரிய திருப்பணிகளில் ஒன்ருகக் குடமுழா முழக்குதலை விதித்தார் தமிழ் வரலாறுடையார். இவ்வாறு எந்நூலில் கண்டாரோ அறிகிலம். சிவபிரானுக்குக் குடமுழா முழக்குவோர் பலர். கணநாதராய நந்தியும் அப்பணி செய்துள்ளார். நந்தியெம்பெருமான் கணநாதர் கட்குத் தலைவர். இதனைப் பெரிய புராணமும் சைவமகா புராணமும் கூறும். குடமுழாக் கொட்டுவாரைக் காண்போம்.

(அ) பாரிடங்கள்

1. கடகரி யுரியர் போலுங் கனன்மழு வாளர் போலும்
   படவர வரையர் போலும் பாரிடம் பலவுங் கூடி
   குடமுடை முழவ மார்ப்பக் கூளிகள் பாட நாளும்
   நடநவில் அடிகள் போலும் நாகவீச் சரவ னரே. —அப்பர்.

2. பாடுமே ஒழியாமே நால்வேதமும்
   படர்சடைமே லொளி திகழப் பனிவெண்டிங்கள்
   சூடுமே யரைதிகழத் தோலும் பாம்பும்
   சுற்றுமே தொண்டைவா யுமையோர் பாகங்

கூடுமே குடமுழவம் வீணை தாளம்
குறுநடைய சிறுபூத முழக்க மாக்கூத்
தாடுமே யந்தடக்கை யனலேந் தும்மே
யவனுகி லதிகைவீ ரட்டனுரே — அப்பர்

(ஆ) திரிபுரத்தசுரன்

மூவெயில்செற்ற ஞான்றுய்ந்தமூவரிலிருவர்நின்றிருக்கோயிலின்
[வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை ஒருவ னிகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ மணிமு ழாமுழக் கவருள்
[செய்த
தேவ தேவநின் றிருவடி யடைந்தேன் செழும்பொழிற்றிருப்
[புன்கூருளானே. — சுந்தரர்

(இ) வாணன்

கட்டுகின் றகழ னுகமே காய்ந்ததும் மதன னுகமே
இட்டமா வதிசை பாடலே யிசைந்தநூ லினமர் பாடலே
கொட்டுவான் முழவம் வாணனே குலாயசீர் மிழலை வாணனே
நட்டமா குவது சந்தியே நானுய்தற் கிரவு சந்தியே. —சம்பந்தர்

(ஈ) நந்திதேவர்

கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்திற்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக நட்டமவை யிட்டவரி டஞ்சீர்
வட்டமதி லுட்டிகழும் வண்டிருவை யாறே. — சம்பந்தர்

இதனுல் குடமுழாப்பணி சிவகணங்களுக்கும கணநாதர் களுக்கும் உரிமையாவது விளங்கும். விளங்கவும் தமிழ் வரலாறுடையார் நந்தியெம்பெருமானுக்குரிய பணிகளில் ஒன்ருக இதனை விதித்ததும் விந்தையே. மேலும் அவர் நூலை நன்கு ஆராயாதுரைக்கும் இயல்பினர் என்பது இவர் அந்நூல் பக்கம் 99 – இல்.

> " வாதவூரடிகளுக்குச் சிவபெருமான் மாணிக்க வாசகர் எனக் காரணப்பெயரைக் கொடுத்தனர் என்று பரஞ்சோதிமுனிவர் மண்சுமந்த படலத்தில் சொல்லு கின்றனர். அது " பின்னுமவர் கனவின்கண்......... வருவனென்ருர் என்றதனுலறியப்படும் "

என்று வரைந்துள்ளதே காட்டும். என்னை? அக்காரணத்தை நன்கு விரித்து,

" பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினுன் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்ருர் "

என வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்திலேயே பரஞ் சோதியார் கூறலானென்க. மற்றும் ' தமிழ் வரலாறு ' நூலின் ஆசிரியர், அந்நூல் பக்கம் 100 – இல்.

" வாசகன் என்னும் சொல்லோடு அடைமொழி களைச் சேர்க்க அமிர்தவாசகன், பிரியவாசகன், மிருது வாசகன், கோரவாசகன், கடூரவாசன்என்பனப்போலப் பல தொடர் மொழிகளாம். வாசகன் என்னுந் தனி மொழியை இத்தொடர் மொழிகளில் எதற்குக் கொள் வது ? சிவபிரான் வாதவூரடிகளுக்கு வாசகன் என்ற பெயரைக் கொடுக்கவில்லையே "

என்று கூறினமை அவர்தம் அகத்தெரிவைக் காட்டுமேயன்றி ஆய்வறிவைக் காட்டாது. மேலும் இவ்வினவை அப்பர் பெருமானுக்குக் கொடுத்தார் போலும் என்னை ? முதற் குறையாக அருளிச்செய்தாரரேயாகலின். மணி என்பதோ மாணிக்கம் என்பதோ அடைமொழியாதற்குரிய வல்ல என்று இவர் கண்டதும் இறும்பூதே. இன்றேல் மணி எனப்புணர்த்தி மணிவாசகன் என்ரே திருஎன்பதைப் புணர்த்தித் திருவாசகன் என்ரே கண்டு அமைதியுற்றிருப்பரே என்க. (நன்னூலார் என்ற வழக்கு நோக்குக.)

இனி இவர் புணர்த்திக்காட்டிய அடைகளோடு கூடிய பெயர்களுக்குரியார் எவ்வரலாற்றில் பேசப்படுகின்றனரோ ? தொன்றைட் புலவர் முதல் மனோன்மணியம் ஆசிரியர் வரை திருவாசகத்தை வாசகம் என்று வழங்கியுள்ளதை அறியார் போலும் ! நாவுக்கரசு என்பதே சிவபிரான் இட்ட பெயராகவும் அதைச் சுருக்கி அரசு எனவும் பெருக்கித் திருநாவுக்கரசு எனவும் சேக்கிழார் பெருமான் கூறலுங்கண்டிலரா ? இதனுல் இறைவன் வாசகன் என்று பெயர்தந்திலன் என்று வழக்கிடல் வழுவாய்க் கழிவதே என்க.

(தொடரும்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு.

தருமையாதீனம் இருபத்தாருவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரம் ஆகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு மாசித்திங்கள் 23 ஆம் நாள் (7—3—82) ஞாயிறன்று காலை கடிக்குளம் (கற்பகநாதர்குளம்) அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயிலிலும் பகல் 12 மணியளவில் திரு இடும்பாவனம் அருள்மிகு சற்குணநாதசுவாமி ஆலயத்திலும் மாலை 6 மணியளவில் திருவுசாத்தானம் (கோவிலூர்) அருள்மிகு மந்திரபுரீசுவரர் ஆலயத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருஉசாத்தானத் திருக்கோயில் திருமுறைப் பணியாளர், திரு. வை. கங்காதரன் அவர்களும், பேரளம் திரு. கணேசன் அவர்களும் அவ்வத் தலங்களில் திருப்பதிகப் பாராயணம் செய்தார்கள். வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., புலவர் திரு. நக்கீரனர் வித்துவான் சொ. முத்தையன் எம். ஏ., ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் ஆகியோர் திருத்தலங்களில் சமய விரிவுரை ஆற்றினர். சமய விரிவுரைகளுக்குப்பின் கடிக்குளம் தேவஸ்தானத்தில் நிர்வாக அதிகாரி திரு. கலைமணி பி. ஏ., அவர்களும் திருவுசாத்தானம் தேவஸ்தானத்தில் நிர்வாக அதிகாரி திரு. ப. சங்கரகுத்தாலம் அவர்களும் இடும்பாவனம் தேவஸ்தானத்தில் திரு. அ. தனபாலன் பி. ஏ., அவர்களும் நன்றியுரை ஆற்றினர். பகல் 1 மணியளவில் ஆலங்காடு தலைமை ஆசிரியர் திரு. மீ. சண்முகம் அவர்கள் இல்லத்தில் மாகேஸ்வர பூசை நடைபெற்றது. அவ்வத்தலங்களில் தலத்திருப்பதிகநூல் வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர் பலர் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

திருக்குவளையில் நெல் மகோற்சவம்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீதியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 6—3—82 சனிக்கிழமை முதல் 10—3—82 புதன்கிழமை வரை நெல் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருக்கோளிலிப்

பதியில் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகளுக்குக் குண்டையூர்க்கிழார் தந்த நெல்மலையைச் சுவாமிகள் ஆரூருக்கு அட்டித்தருமாறு ஆளிடவேண்டிக் கொண்டபடி, இறைவன் ஆணையால் பூதங்கள் எடுத்துச் சென்றமை முதலிய அற்புத வைபவங்கள் இம்மகோற்சவத்தில் நடைபெற்றன. 9—3—82 செவ்வாயன்று நெல்மலையை ஆரூருக்குச் சேர்ப்பிக்க இறைவர் கட்டளையிடும் உற்சவம் சிறப்பான முறையில் நடைபெற்றது. பக்தர்கள் வந்திருந்து தரிசித்துப் பயன் பெற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்.

மதுரை (கிளை)

திருப்புத்தூரில் திருமுறை வழிபாட்டு விழா.

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் 20 ஆவது திருமுறைக்கூட்டு வழிபாட்டுவிழா குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த திருப்புத்தூர் ஸ்ரீ திருத்தளிநாதர் திருக்கோயிலில் குன்றக்குடி மகாசந்நிதானத்தின் அருளாதரவுடன் நடைபெற்றது. காலை 10 மணி அளவில் திரு. பி. டி. ஆர். கமல தியாகராசன் அவர்கள் தலைமையில் வழிபாடு தொடங்கியது, புலவர். சி. கல்யாணசுந்தரனார் திருவாசக பாராயணம் செய்ய ஊர்ப்பெரியோர்களும் அன்பர்களும் வலமாக வந்து ஸ்ரீ பைரவர் சந்நிதி முன்பு கூடினர். ஓதுவார்கள் பலர் தலப்பதிகத்தைப் பாராயணம் செய்தனர். அதன்பின் பேராசிரியர் க. வெள்ளை வாரணனார் அவர்கள் பணிமன்றத்தின் சார்பில் ‘ திருப்புத்தூர்த் திருப்பதிகங்கள் ’ என்றநூலை வெளியிட்டார்கள். ஸ்ரீ திருத்தளி நாதர், ஸ்ரீ சிவகாமி அம்பாள், ஸ்ரீ பைரவமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடும் அருச்சனையும் நடைபெற்றன.

விளக்கக்கூட்டம் காலை 11 மணிக்கு இறைவணக்கத்துடன் தொடங்கியது. திருப்புத்தூர் நகரப்பிரமுகர்கள் சார்பில் திரு. நா. அருணாசலம் செட்டியாரும், திருப்புத்தூர் வட்டாட்சியர் திரு. எஸ். சொக்கலிங்கம் பிள்ளையும் வரவேற்றுப்பேசினர். பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் பதிகங்களின் உட்பொருளை விளக்கினார். சிவகங்கைப் பொறியாளர் திரு. முத்துகிருஷ்ணன் ‘பெரியபுராணத்தில் திருப்புத்தூர் ’ என்ற பொருளிலும், பேராசிரியர் திரு. சி. கோவிந்தராசனார் ‘ கல்வெட்டில் திருப்புத்தூர் ’ என்ற பொருளிலும் பேசினர். மன்ற அமைப்பாளர் வித்துவான் தா. குருசாமி தேசிகர் தருமையாதீன குருமகாசந்நிதானத்தின்

ஆசிகளைப்படித்து மன்றத்தின் நோக்கங்களை விவரித்தார். விழாத் தலைவர் திரு. பி. டி. ஆர் கமலதியாகராசன் தலைமையுரை ஆற்றினார். பேராசிரியர் திரு. இரத்தினசபாபதி நன்றி நவின்றார். மங்கல வாழ்த்துடன் விழா நிறைவுற்றது.

திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின உற்சவம்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான அட்டவீரட்டத் திருத்தலங்களுள் ஒன்றான திருக்குறுக்கை அருள்மிகு ஞானம்பிகை உடனாகிய ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் மாசிகம ஏகதின உற்சவம் மாசித்திங்கள் 25 ஆம் நாள் (9—3—1982) செவ்வாய்க்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ காமதகனமூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகட்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது. திருவீதியுலாக் காட்சியின் போது திருமுறைப் பாராயணம் நடைபெற்றது. அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

கடிதம்:

புலவர் அ. தம்பிரான் முதலியார் பி. ஏ.,

ஓய்வுபெற்ற தமிழாசிரியர், 22, பெரியதெரு, திருவத்திபுரம்.

* தமிழ் வளர்க்கும் தருமையாதீனத் திங்கள் இதழ் "ஞான சம்பந்தம்" மக்களிடையே பரவிச் சைவசமயத் தொண்டாற்றி வருவது அனைவரும் அறிந்ததொன்று, போற்றுதற்குரியது மாகும். அவ்விதழில் பேரறிஞர்கள் சமயநெறிச் சீலர்கள் அறிவுவழி வடிக்கும் அரிய சமயக் கருத்துக்கள், திங்களின் சிறப்பு நாட்கள், வழிபாட்டுக்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள், சைவ சமயப் பேரன்பர்கள் விடுக்கும் கடிதங்கள் உள்ளிட்ட யாவும் வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கது. இத்துடனமையாது ஆதீன கர்த்தரின் அருளாணையைத் தலைவணங்கியேற்று ஆதீனத்தைச் சார்ந்த வெளியூர் உள்ளூர் சிவாலயங்களில் ஆதீனப் புலவர்களாலும் சமயப் பேரறிஞர்களாலும் நிகழ்த்தப் பெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் அத்திங்களிதழில் வெளியிடப் படுவது சிறந்த எடுத்துக்காட்டாவதோடு வழிகாட்டியாகவும் விளங்குகிறது. இவ்வகையில் செய்யப்படும் சமயப்பிரசாரம் அனைத்துச் சிவாலயங்களிலும் நிகழ்த்தப்பெறுவதால் மக்கள் நல்வழியில் நாட்டங்கொண்டு திருந்துவர்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதி ஸு பங்குனி மீ 1உ முதல் 31உ முடிய)

(14—3—1982 முதல் 13—4—1982 முடிய)

சூ.			ரா
பு	இராசி		ல/
சு			
கே		கு சந்	செ சனி

கு	சந்	ராகு சு	சூ செ
பு	அம்ஸம்		
ல/			சனி
	கே		

ஸ்ரீ துன்மதி ஸு பங்குனி மீ 1உ பானுவாரம் விசாக நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 23 நாழிகை 11 வினடிக்கு கடக லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மறு ஆண்டின் லோகரட்சக அதிபதிகளை ஏற்படுத்துகின்ற நிமித்தம் கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரணமாக சௌரமான பங்குனி மாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். பங்குனி மீ 13உ சைத்திர சுத்தப் பிரதமை சாந்திரமான வருஷாரம்பம். அன்றைய வாராதிபதி சுக்கிரன் கலியுகாப்தம் 5083 சௌரமான துந்துபி ஸு த்துக்கு இராஜாவாகத் தேர்ந்து வருகிருர். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாவது லோகத்தில் ஜனங்கள் உணவு, உடை, இருப்பிட வசதி ஆகியவற்றில் தன்னிறைவு பெற்று சௌகரிய வாழ்க்கை நடத்துவார்கள். குரு சுக்கிரன்

நல்ல ஸ்திதியில் விளங்குவதால் தேசங்களில் பொது நல கட்டிடங்கள் நிர்மாணித்தல், ஆலயத் திருப்பணிகள், தெய்வ கைங்கரியங்கள் ஆகிய புண்ணிய காரியங்கள் ஆன்றோர்களின் திருநோக்கில் செவ்வையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். குஜன் சனி வலுப்பெற்று விளங்குவதால் தேசங்களில் ஆங்காங்கு தொழில் நிறுவனங்கள் இயந்திர ஆலைகள் ஏற்பட்டு மக்களுக்கு ஜீவனோபாயத் தொழில் வாய்ப்புகள் ஏற்படும். தேசங்களில் ஆளுநர்கள் செங்கோல் ஆட்சி புரிந்து மக்களை இரட்சிப்பார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் இறைவன் சித்தமாக ஞானசாரியர்களாக வந்து திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் லோக மாந்தர்களுக்கு உயர் ஞானம் போதித்து அருளிச் செய்வார்கள். லோகத்தில் திக்விஜயம் செய்து புண்ணிய க்ஷேத்திரங்களின்மகத்வம், சாஸ்திரம், வேதம், சம்பிரதாய நல்வழிகள் ஆகியவற்றின் புனித மேன்மையை சமூகத்தினருக்கு இயம்பி, மக்கள் அவ்வழி அனுஷ்டிக்கின்ற பண்பில் உயர் அனுக்கிரகம் செய்தருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விதி முறைகளின்படி நடைபெற்று வரும். ஆலய நிர்வாக உத்தமவான்களின் தெய்வீக மனப்பாங்கில் தெய்வகாரியங்கள் உற்சவ வைபவங்கள் விமரிசையாக நடைபெறும். எல்லாப் பிரஜைகளும் தெய்வபக்தியாக நல்வினை புரிந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்ப அபி விருத்தியில் பண வருமானங்கள் நல்ல விதத்தில் வந்து கொண்டிருக்கும். இல்லத்தில் சுப விசேஷங்கள் நடக்கும் பசுக்கள்பால் பிராப்தியில் திருப்தியளிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லுதல் தெய்வதரிசனம் செய்தல் ஆகும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு வித்துவ ஜனங்களிடையே உரையாடுதல் ஆகிய பிரபலம்தரும். எல்லாக்காரியங்களும் ஜெய பிராப்தியாக நடந்துவரும். மார்ச்சு 14, 20, 21, 22, 23, 24, 27, 28, 31 ஏப்ரல் 1, 7, 8, 9, 10 தேதிகளில் தனதாயம் தரும்; காரிய சித்தியாகும். மார்ச்சு 15, 16, 17 ஏப்ரல் 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு. - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்ப அபி விருத்தியில் பண வருமானம் கணிசமாக வரும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். இல்லத்தில் சுப விசேஷங்கள் நடக்கும். முயற்சிக்கின்ற எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடந்து வரும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மார்ச்சு 14, 15, 16, 17, 23, 24, 25, 26, 29, 30 ஏப்ரல் 2, 3, 4, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். மார்ச்சு 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பண வருமானங்கள் வந்துகொண்டி ருக்கும். சகோதரருக்கு அரசாங்கத்தில் உயர்வுதரும். வீடு வாகன பிராப்தியில் ஏப்ரல் 4வ ஆனல் நல்லன உருவாகும். வித்தியா வியாபாரதி கலைத்துறைகளில் ஒப்பந்த லேவாதேவி களில் நற்பலன்ஏற்படும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடைபெறும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 15, 16, 17, 18, 19, 25, 26, 27, 28, 31 ஏப்ரல் 1, 4 5, 6, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும் மார்ச்சு 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டேடோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தில் பண வருமானங்கள் வெகுவாக வந்து சேரும். மார்ச்சு 27 வ முதல் சிந்தையில் ஓர் தெளிந்த நிலைமையும் வித்துவத்துவம் கலைத்துறைகளில் உன்னதஸ்திதியும் ஆகும். ஏப்ரலில் ஓர் புதிய வாகனம் வாங்குதல் ஆகும். எடுத்துக் கொண்ட எல்லாக் காரியங்களும் நல்லமுறையில் புனிதமாக நடந்துக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மார்ச்சு 18, 19, 20, 21, 27, 28, 29, 30 ஏப்ரல் 2, 3, 4, 7, 8 தேதிகளில் தனுதாயம், காரிய சித்தி ஆகிய

நற்பலன்கள் ஏற்படும். 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்திவரும். மிதமிஞ்சிய செலவினங்களும் ஏற்படும். சகோதரர் நலம் நன்றாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்பலன் தரும். தொழிலாளிச்சிப்பந்திகளிடம் நேர்மையை வற்புறுத்தலில் அல்லது இளைஞர்களை திருந்தச் செய்தலில் மனக்கசப்பாகி பின் உணர்ந்துவரும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 14, 20, 21, 22, 23, 24, 30, 31 ஏப்ரல் 1, 4, 5, 6, 9, 10, 11 தேதிகளில் தனதாயம், காரியானுகூலம், பிரபலஸ்தர் நட்பு ஆகிய நற்பலன் ஏற்படும். மார்ச்சு 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகள் மத்திம பலன்தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் வெகுவாக வந்துசேரும். இல்லத்தில் நல்லகாரியம் நடக்கும். வீடுவாகனபிராப்தியில் நல்ல சௌகரியம்தரும். இராசிக்கு இரத்த பித்தமயக்கம் வந்து உடன் குணமாகும். ஓர் புனிதஸ்தலம் செல்கின்ற சந்தர்ப்பம் ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களுக்கு ஆரோக்கியம் தரும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். மார்ச்சு 15, 16, 17, 23, 24, 25, 26, 31 ஏப்ரல் 1. 2, 3, 4, 7, 8, 12, 13 தேதிகளில் தனதாயாதி. நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்துக்கொண்டிருக்கும். பூமி இயந்திர சாதனங்கள் பரிவிர்த்தனையாகும். வீடுவாகனபிராப்தி யில் நல்ல சௌகரியம் தரும். வித்தியா வியாபாராதிகளில்

ஒப்பந்தம் லேவா தேவிகளில் நற்பலனை ஏற்படுத்தும். தாரபுத்திரகளின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மார்ச்சு 14, 18, 19, 25, 26, 27, 28 ஏப்ரல் 2, 3, 4, 5, 6, 9, 10 தேதிகளில் தனுதாயம், புதிய ஒப்பந்தம், காரியஜெயம் ஆகிய நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - மதோ ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தி வரும். ஓர் ஆபரண பிராப்தியையளிக்கும். சகோதரர் அல்லது சகோதரிக்கு சுபம்ஏற்படும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் ஏப்ரல் 7 உ முதல் பிரபலஸ்திதியை ஏற்படுத்தும். எல்லா காரியங்களிலும் நல்லன ஏற்படும், தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 15, 16, 17, 20, 21. 22, 27, 28, 29, 30 ஏப்ரல் 5, 6, 7, 8, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 31 ஏப்ரல் 1இத் தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ பா. பி. - பு. த. ப, ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வெகுவாக வந்துசேரும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். வெளுமைவஸ்துவின் பிராப்தியளிக்கும். வித்தியா வியாபாராதிகளில் நற்பலன் வந்து சேரும். முயற்சிக்கின்ற எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். வீடுவாகன பிராப்தியில் நவீனம் பொருந்தி நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மார்ச்சு 14, 18, 19, 23, 24, 29, 30, 31 ஏப்ரல் 1, 7, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 2, 3, 4 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம்¾ - திருவோண ம்- அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் நல்ல விதத்தில் வரவாகிக்

கொண்டிருக்கும். மார்ச்சு 31வ. க்கு கணிசமான ஓர் பொருள் கைக்குவரும். சகோதரர்க்கு நல்லன ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் ஏப்ரல் 7வ. ஆனல் கௌரவஸ்திதி யும் உயர்வும் தரும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபம் ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலம் மார்ச்சு 14, 15, 16, 17, 20, 21, 25, 26, 31 ஏப்ரல் 1, 2, 3, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

11. கும்பம்:- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பா பிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துசேரும். சில விஷயங் களில் கால தாமத நிலைமையாகிபின் நற்பலன்தரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். பூர்வசொத்து பிராப்தி அல்லது பழயதனம் வரவேண்டியவை அதிக பிரயாசை யில் கைக்கு வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மார்ச்சு 15, 16, 17, 18, 23, 24, 27, 28 ஏப்ரல் 2, 3, 4, 5, 6, 11, 12, 13 தேதிகளில்தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் தக்கசமயத்திற்கு வந்துசேரும். சகோதரர் நல்லஸ்திதியில் இருந்துவருவர். வித்தியாவியாபாராதி கலைக்துறைகளில் ஏப்ரல் 7வ. முதல் நல்ல வாய்ப்பும் உயர்ந்த ஸ்திதியும் ஆகும். பொது நலக்காரியங்களில் ஈடுபாடு ஆகும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். பூர்வப்பொருள் பிராப்தியில் வழக்கு ஏற்பட்டு பின் அனுகூலம் தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மார்ச்சு 18, 19, 20, 21, 22, 25, 26, 29, 30 ஏப்ரல் 4, 5, 6, 7, 8 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 14, ஏப்ரல் 9, 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

பங்குனிமாதச் சிறப்புநாட்கள்

14—3—82 ஞாயிறு, மீனரவி 23-11. சடசீதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். காரடையான் நோன்பு.

17—3—82 புதன், காளாஷ்டமி.

22—3—82 திங்கள், பிரதோஷம்.

23—3—82 செவ்வாய், மாதசிவராத்திரி, தண்டியடிகள் நாயனர் குருபூஜை.

24—3—82 புதன், போதாயன அமாவாசை.

25—3—82 வியாழன், சர்வ அமாவாசை.

26—3—82 வெள்ளி, வசந்த நவராத்திரிவிழா ஆரம்பம். தெலுங்கு வருடப் பிறப்பு. யுகாதிப்பண்டிகை.

27—3—82 சனி, திருக்கடவூர் மார்க்கண்டேயர் அசுவதி தீர்த்தம்.

29—3—82 திங்கள், கிருத்திகை விரதம். வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். திருபுவனம், திருவாரூர், பேரளம், உய்யக்கொண்டான்திருமலை முதலிய இடங்களில் பங்குனி உத்திர உற்சவாரம்பம்.

30—3—82 செவ்வாய், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி சம்வத்ஸர அபிஷேகம். நேச நாயனர் குருபூஜை.

31—3—82 புதன், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி சம்வத்ஸர அபிஷேகம். கணநாத நாயனர் குருபூஜை.

1—4—82 வியாழன், திருவையாறு அந்தணபுரத்தில் ஸ்ரீ திருநந்திதேவர் ஜனனம் (திருவாதிரை). இரவு பட்டாபிஷேகம்.

2—4—82 வெள்ளி, ஸ்ரீராமநவமி. வசந்தநவராத்திரி பூர்த்தி. திருக்கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம். திருவையாறு, திருமழபாடியில் ஸ்ரீ திருநந்திகேசுவரருக்குத் திருக்கல்யாணம் (புனர்வசு). மூனையடுவார் நாயனர் குருபூஜை.

4—4—82 ஞாயிறு, ஆயில்ய விழா.

5—4—82 திங்கள், பிரதோஷம்.

7—4—82 புதன், பங்குனி உத்திரம். வேளூர். திருவையாறு முதலிய தலங்களில் பங்குனி உத்திர தீர்த்தம். தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் துந்துபி வருடத்திய குருபூசை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டுப் பூஜையில் வைத்தருளல்.

8—4—82 வியாழன், பௌர்ணமி விரத பூஜை. மாதபூஜையில் தயிர் அபிஷேகம். திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவர சுவாமிக்கும், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமிக்கும் சம்வத்ஸர அபிஷேகம்.

9—4—82 வெள்ளி, காரைக்காலம்மையார் குருபூஜை.

12—4—82 திங்கள், சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம். சங்கடஹரசதுர்த்தி.

13—4—82 செவ்வாய், மேஷரவி 43-32 திருவையாறு விஷுபுண்யகால தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. தருமை 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை. தொகையடியார்கள் குருபூஜை.

14—4—82 புதன், துந்துபிவருடம் விஷு புண்ணியகாலம் தமிழ் வருடப் பிறப்பு. புதுப்பஞ்சாங்கபடனம்.

The following particulars regarding the ownership of the GNANASAMBADAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Central Rules. 1956.)

Form IV.

1. Place of puplication - DHARMAPURAM
2. Periodicity of its Publicstion - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri V RAMAIAHPILLAI
Manager,
Dharmapuram Adhinam Mutt.
Nationality - INDIAN
Address - West Street, Dharmapuram
Mayuram P. O, 609 001
4. Editor's Name - Vidwan Srimath.
RAMALINGA THAMBIRAN
SWAMIGAL
Nationality - INDIAN
Address - Velur Devasthanam,
Vaithiswarankoil. 609 117
5: Names & addresses of individuals who own the Newspaper, own Partnerships or share holders holding more than one percent of the total Capital
His Holiness Sri - la - Sri
SHANMUKA DESIKA
GNANASAMBANDA
PARAMACHARYA
SWAMIGAL Avl
Tharmapuram Adhinam
Dharmapuram
Mayuram P. O. Tamilnadu

I. V. Ramaiah Pilli hereby declare that tha particulars given are true to best of my knowledge & belief.

(S-d) V. RAMAIAH PILLAI
Publisher.

Dated 28—2—1982.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram at the Gnanasambanress Ddharmapuram, Maydam uram. 10-2-82